# தி.வரதராசன்:

## பன்முக ஆளுமையாளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.வரதராசன்:
# பன்முக ஆளுமையாளன்



வெளியீடு:
பணிநயப்பு விழா ஒழுங்கமைப்புக்குழு,
வதிரி.
2017.01.15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோக்கம் தெளிவுற...

வதிரி தமிழ் மன்றம் என்ற பெருவிருட்சத்தின் நிழலுக்குள் தம்மையும் இணைத்துக் கொண்டு அந்த கட்டமைப்பின் மூலமாக தமது புலமையினையும் நிர்வாகத் திறனையும் மிளிரச் செய்தவர்களில் மணிவிழா நாயகன் தி. வரதராசனும் ஒரு முக்கிய இடத்தை பெறுகின்றார்.

ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒருவகையில் குறிப்பிட்ட துறைகளிலோ அல்லது பல்வேறு விடயங்களிலோ ஆளுமை கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். ஆனால் அவர்கள் தமது திறன்களையும் ஆளுமையினையும் வெளிக்காட்டுவதற்கான அரங்கினை அல்லது தளத்தினை அமைத்தக் கொடுக்க வேண்டியது சமூகத்தின் கடமையாகும். இவ்வாறான ஒரு தளமாக நமது முன்னோர்கள் அமைத்துத் தந்துள்ள ஒரு பரந்த தளமான வதிரி தமிழ்மன்றத்தில் சாதாரண உறுப்பினராக இணைந்து பின்னர் நிர்வாக சபை உறுப்பினர், தொடர்ந்து தலைவர், செயலாளர் என்ற உயர்நிலைப் பதவிகளை அலங்கரித்திருப்பவர் மணிவிழா நாயகன் திரு. தி. வரதராசன் அவர்கள்.

இங்கு கிடைக்கப்பெற்ற அனுபவம், ஆளுமை மிளிர்ச்சி ஆகியவற்றின் மூலம் திரு.தி.வரதராசன் இன்று பல்வேறு உயர் நிலை நிர்வாக கடமைகளில் உயர் பதவிகளை வகித்து வருகின்றார்.

உத்தியோக பூர்வமாக கிராம அலுவலராக அவர் வடமராட்சியில் குறிப்பாக கரவெட்டி பிரதேச செயலக ஆட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நன்கறியப்பட்டிருந்தாலும் விளையாட்டுத்துறையில் குறிப்பாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் என்ற அமைப்பின் மூலமாக அவர் யாழ் மாவட்டத்தில் நன்கு பிரசித்தம் பெற்றவராகிறார்.

வதிரி தமிழ்மன்ற சமூகத்தினால் வளர்க்கப்பட்ட அவரது திறன் பின்னர் அம்மன்றத்திற்காகவே அதிகளவில் உள்வாங்கப்பட்டதுடன் உதைபந்தாட்ட லீக் போன்ற அமைப்புகளையும் மேலாண்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதற்கான சந்தர்ப்பத்தையும் வழங்கியது.

மறுபுறம் ஆன்மீகத்துக்கான சேவைகள், வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலயத்திற்காக அவரும் அவரது குடும்பத்தினரும் ஆற்றிய சேவைகள் தொண்டுகளை யாவரும் அறிவர்.

இவ்வாறன பன்முக ஆளுமை கொண்ட திரு.தி.வரதராசன் அவர்கள் பணி ஓய்வு பெறும் நிலையில் அவர் இந்த சமூகத்திற்கு ஆற்றிய சேவையினை கௌரவிக்கும் முகமாக நடத்தப்படும் விழாவில் இந்த சிறப்பு மலரும் வெளியிடப்படுகிறது.

ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள், வாழ்த்து கவிதைகள், கட்டுரைகள், முதலிய பகுதிகளுடன் இந்த சிறப்புமலர் தொகுக்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்புமலர் வெளிவருவதற்கு சகல உதவிகளும் புரிந்தவர்கள், நிதி உதவிகளையும் வழங்கியோர் மலர் வடிவமைப்புச் செய்த பரணி அச்சகத்தினர் என்போருக்கு நன்றி.

நிர்வாக கிராம அலுவலர் பதவியிலிருந்து ஓய்வுபெறும் திரு.தி.வரதராசன் அவர்களின் சேவை எமது சமூகத்திற்கு வேறு மார்க்கங்கள் ஊடாக தொடர்ந்து கிடைக்க வேண்டும் அதற்காக எல்லாம் வல்ல பூவற்கரை பிள்ளையாரின் அருளாசிகள் அவருக்கு கிடைக்க வேண்டுமென வேண்டுகிறோம்.

தி.வரதராசன் பணிநயப்பு விழா ஒழுங்கமைப்பு குழு
வதிரி
2017.01.15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் வாழ்த்துச் செய்தி



வடமராட்சி பிரதேச செயலகத்தில் நிர்வாக கிராம அலுவலராக கடமையாற்றி ஓய்வுபெறும் திரு திரவியசிங்கம் வரதராசன் அவர்களது பணிநயப்பு விழாவினையொட்டி வெளியிடப்படும் மலருக்கு அவருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை கொள்கின்றேன்.

அல்வாய் தெற்கு கிராம சேவையாளராக பலகாலம் கடமையாற்றி அளப்பரிய தன்சேவையினை மக்களுக்கு சிறப்புடன் ஆற்றினார். இவரது சிறப்பான பணி காரணமாக நிர்வாக கிராம அலுவலராக பதவி நியமனம் பெற்று தனது சேவையினால் மக்கள் மனங்களில் இடம்பெற்றார்.

தெய்வ நம்பிக்கையாலும் பண்பாட்டினாலும் சிறந்தவர்கள் வாழும் வதிரி மக்கள் பெருமனம் படைத்தவர்கள். பழகுவதற்கு இனிமையும் பார்ப்பதற்கு எளிமையும் கொண்ட திரு.தி.வரதராசன் அவர்களின் சேவையை மக்கள் பயன் பெற்றது என்றால் மிகையாகாது.

கடமையிற் பற்றும் கடின உழைப்பும் கொண்ட இவர் சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவிப்பதோடு, ஓய்வு காலத்தில் மகிழ்வாக வாழ்ந்து சமூகத்திற்கு தனது பணிகளை தொடர வாழ்த்துகிறேன்.

திருமதி விஜயகலா மகேஸ்வரன்(பா.உ)
சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர்
சிறுவர் விவகார அமைச்சு
3வது மாடி செய்திரிபாயா பிரிவு II
பத்திரமுல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பணிப்பும் மனிதப்பண்பும் மிக்க சமுகசேவையாளன்



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசெயலக பிரிவில் நீண்டகாலம் கிராம அலுவலராக கடமையாற்றி தலைமைப்பீட கிராமஅலுவலராக பதவி உயர்வு பெற்று ஓய்வுபெறும் திரு.தி.வரதராஜன் அவர்களின் பணிநயப்புவிழா சிறப்பிதழுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்

இப்பிரதேசத்தின் பல கிராமஅலுவலர் பிரிவில் மிகவும் சிறப்பாக பணியாற்றி வறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு அதனூடாக மக்களுக்கு அரும்பணியாற்றி எல்லோர் மனதிலும் நீங்கா இடத்தைப் பிடித்தவராக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நான் இப்பிரதேசசெயலகத்தில் பிரதேசசெயலாளராக கடமையாற்றிய காலப்பகுதியில் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் கப்பூது, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி வடக்கு ஆகிய கிராமஅலுவலர் பிரிவுகளில் இவர் தனது பணிகளை மிகவும் சிறப்பாக ஆற்றியிருக்கின்றார். மேலதிகாரிகளின் கட்டளைகளை சரியானமுறையில் செயற்படுத்தி மக்கள் நலன்சார் வேலைத்திட்டங்களில் குறிப்பாக சமுக பாதுகாப்பு ஓய்வூதியம், வீட்டுத்திட்டங்கள் மற்றும் நிர்வாக கடமைகளை மிகவும் நேர்மையாகவும் பக்கச்சார்பின்றியும் அரச கொள்கைகள் சுற்றறிக்கைகளுக்கு அமைவாகவும் செயற்படுத்திய முன்னுதாரணம் மிக்க கிராமஅலுவலர் என்று கூறுவது மிகையாகாது.

கடந்தகால அனர்த்தங்களின் போது மக்கள் பெரும் எண்ணிக்கையில் இடம்பெயர்ந்து இப்பிரதேசத்திற்கு வருகைதந்து நலன்புரி நிலையங்கள் மற்றும் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்தபோது அவர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு பணியாற்றியமை பாராட்டத்தக்கதாகும். இப்பிரதேச செயலகத்தினால் முன்னெடுக்கப்படும் கலாசாரவிழா, விளையாட்டுவிழா, மகளிர்தினவிழா, அறநெறிவிழா என்பவற்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது தன்னை முழுமையாக ஈடுபடுத்தி அர்ப்பணிப்புடனும் இதயசுத்தியுடனும் தனது பணிகளை ஆற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

விளையாட்டுத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் இச்செயலகத்தின் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்காக தனது பங்களிப்பினைச் சிறப்பாக வழங்கியிருப்பதுடன் விளையாட்டு உத்தியோகத்தர்கள் கடமையாற்றாத காலத்தில் பதில் விளையாட்டு உத்தியோகத்தராகவும் சிறப்பாக பணிபுரிந்து எல்லோரினதும் ஒத்துழைப்பினைப்பெற்று விளையாட்டுப்போட்டிகளை முன்னின்று நடாத்தி எல்லோரினதும் பாராட்டுக்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவற்றிற்கு மேலாக தான் பிறந்த கிராமத்திற்கு வதிரி தமிழ் மன்றம், வதிரி டயமன்ஸ் விளையாட்டு கழகம் என்பவற்றின் ஊடாக பல்வேறு திட்டங்களையும் செயற்பாடுகளையும் மிகவும் சிறப்பாக முன்னெடுத்து தனது கிராமத்தின் வளர்ச்சியில் பங்கெடுத்தமையும் குறிப்பிடவேண்டியதாகும். இக்கிராமத்தில் வறிய நிலையிலுள்ள மாணவர்களுக்கு இலவச மாலைநேர வகுப்புக்களை ஒழுங்குபடுத்தி அவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளில் பங்களிப்புச்செய்தமையும் பெருமைக்குரியதாகும். வதிரி தோற்பொருள் உற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு பிரதேசசெயலகத்துடன் தோளோடு தோள் நின்று அரும்பணியாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

மக்களை மதிக்கும் தன்மை, எளிமை, நேர்மை, நேர்மனப்பாங்கு எல்லோருடனும் அன்பாகவும் மகிழ்ச்சியாகவும் பழகும் இயல்பு துன்பத்திலிருப்பவர்களுக்கு உதவும் மனப்பான்மை போன்ற உயரிய வாழ்வியல் அம்சங்களையும் சிறந்த குணாதிசயங்களையும் கொண்ட திரு.தி.வரதராஜன் அவர்கள் தனது ஓய்வுக்காலத்தில் இன்னும் நீண்டகாலம் மகிழ்ச்சியாக தனது குடும்பத்தினருடன் வாழ்ந்து இன்னும் பல சமய, சமூக பணிகளை முன்னெடுப்பதற்கு எல்லாம் வல்ல வதிரி பூவற்கரை விநாயகப்பெருமான் அருள் பாலிக்க வேண்டிப் பிரார்த்திப்பதுடன் எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. சி.சத்தியசீலன்**
**செயலாளர்**
**மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிப, கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி**
**மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சு, வடமாகாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாவட்ட அரசாங்க அதிபரின்
# வாழ்த்துச் செய்தி



கரவெட்டிப் பிரதேசத்தின் நிர்வாக கிராம அலுவலராக பணியாற்றி அகவை அறுபதை அடையும் திரு தி. வரதராசன் அவர்களின் பணிநயப்பு விழாவினைக் கொண்டாடும் இவ்வேளை வெளியீடு செய்யப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

திருவாளர் தி. வரதராஜன் அவர்கள் 1982 ல் தனது அரச பணியினை ஆரம்பித்து1987 ல் கிராம அலுவலராக கரவெட்டி பிரதேசத்தின் கரணவாய் மேற்கு கிராம அலுவலராக கடமையினைப் பொறுப்பேற்றிருந்தார், தொடர்ந்து இப்பிரதேச செயலகத்தின் பல்வேறுபட்ட கிராமங்களில் கிராம அலுவலராக பணியாற்றி நிர்வாக கிராம அலுவலராகவும், யாழ் மாவட்ட கிராம அலுவல் சங்கத்தின் தலைவராகவும் செயற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

தனது பணியினை திறம்பட ஆற்றி அகவை அறுபதில் மணிவிழாக்காணும் இவ்வேளை வெளியீடு செய்யப்படும் மலர் சிறப்புற வெளிவரவும், மலர் வெளியீடு செய்ய முனைந்த நிறுவனத்தினரின் மலர்குழுவிற்கும் பாராட்டுதல்களை தெரிவிப்பதோடு அவரின் ஓய்வு காலம் சிறப்புற அமையம் என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர்,
யாழ் மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரவெட்டிப் பிரதேசசெயலரின் வாழ்த்துச்செய்தி



மணிவிழா செய்தி தனது பணியில் இருந்து ஓய்வுபெறும் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான நிர்வாக கிராம அலுவலர் திருமிகு.தி.வரதராசன் அவர்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இருபத்தைந்து வயது முதல் அரச பணியில் இணைந்து கொண்ட இவர், இன்றுவரை அதே இருபத்தைந்து வயது இளைஞனைப் போன்ற மிடுக்குடனும் துடிப்புடனும் அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் தலைமைப்பண்புடனும் செயற்பட்டு வருவது வியப்பிற்குரியது.

கிராம அலுவலராக பல்வேறு சவால்களை வென்றெடுத்தவராகவும் மக்கள் மத்தியில் திருப்தியையும் மகிழ்ச்சியையும் உண்டாக்கும் சிறந்த அரச உத்தியாகத்தர் என்ற புகழையும் அவர் பெற்றிருந்தார். தன் அரச பணிக்காலம் முழுவதையும் எமது கரவெட்டிப்பிரதேசத்திற்கே அர்ப்பணித்த இவர், தனது குரல் வளத்தாலும், ஆளுமைப் பண்பாலும், விளையாட்டுத்திறனாலும் எப்போதுமே எல்லோருக்கும் உவப்பானவராக விளங்கினார்.

2015 ஆம் ஆண்டில் இருந்து எமது பிரதேச செயலகத்தின் நிர்வாகக் கிராம அலுவலராகப் பதவியேற்று இன்னும் வினைத்திறனுடன் அலுவலகத்தின் கடமைகளைப் பொறுப்புக்களைப் பகிர்ந்தளிக்கும் சிறந்த தலைமைத்துவ ஆற்றலால் நிறைவேற்றிவந்தார். கிராம அலுவலர்களுடன் நட்பு ரீதியான அணுகுமுறை மூலம் ஒருங்கிணைக்கும் இவரது ஆற்றல் எல்லோருக்கும் முன்மாதிரியானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகையாலும் புண்படுத்தாத வார்த்தைகளாலும் கடமைகளை நிறைவேற்றிக்கொள்ளும் திறன்மிக்கவர். எமது பிரதேச செயலகத்தின் தேசிய மட்டச் சாதனைகளோடு இவரும் கலந்தவராகவே விளங்குகின்றார்.

எமது உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கத்தின் தலைவராக இருந்து இவர் ஒருங்கிணைக்கும் நிகழ்வுகள் இரசிப்புக்குரியவை. பாராட்டுதற்குரியவை. பிரதேச கலாசார விழா, மகளிர் தின விழா, சிறுவர் - முதியோர் மாற்றாற்றல் உடையோர் தினவிழா என்று எமது செயலகத்தின் அனைத்து நிகழ்வுகளிலும் ஒருங்கிணைப்பாளராக இவரது பணிகளை மறக்க முடியாது.

வயது வேறுபாடோ, பதவி வேறுபாடோ இன்றி எல்லோருடனும் நட்புரிமையாகப் பழகி எல்லோருக்கும் இனிக்கும் மனிதவர் இவர். இன்று இவருக்கு அறுபது வயது என்பதும் பணியில் இருந்து ஓய்வு பெறப்போகின்றார் என்பதும் நம்பமுடியாததாகவே இருக்கின்றது.

தனது ஓய்வுக்காலத்திலும் சிறந்த சமூகப் பணியை ஆற்றுவதோடு, தனது குடும்பத்தினரோடு மகிழ்ச்சியாக ஆரோக்கியமாக நீண்ட ஆயுளைப் பெற்றுச் சிறந்து வாழ வாழ்த்துகின்றேன்.

**திரு.ச.சிவஸ்ரீ**
**பிரதேச செயலர்,**
**பிரதேச செயலகம்,**
**கரவெட்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from Mr.Anura De Silva



**Dear Friends in Vadamarachchi,**

It is with great interest I wish to thank the organizing committee for allowing me to insert my message in the souvenir that shall be published in honor of Mr. T. Varatharasan during the felicitation ceremony that shall be held on January 15, 2017.

In deed I know Mr. Varatharasan for many years purely due to the fact that his involvement in football and football administration. He was a live wire with Point Pedro Football League for a considerable period and has immensely contributed for the betterment of the game in the region. His efforts for football development really inspired FFSL to expand the prevailed affiliation in Jaffna peninsula from two leagues to four in the year 2013.

This is a great opportunity taken by organizing committee to felicitate Mr. T. Varatharasan for his efforts in football. I, as the President of FFSL and as a football loving person have engaged in many activities during last few years and have enjoyed every minute of it during my visits to Point Pedro and Vadamarachchi regions as I was involved with people with heart & passion for this beautiful sport "FOOTBALL"

I wish Mr. Varatharasan the very best for his future.

"God Bless"

**ANURA DE SILVA**
**President**
**Football Federation of Sri Lanka**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்டத்தில் உன்னதங்கள் கண்ட செயல் வீரன்



நண்பர் திரு T. வரதராஜன் அவர்களை, *1990* ம் ஆண்டு, கொழும்பில் நடாத்தப்பட்ட கால்பந்தாட்ட பயிற்சியாளர்களுக்கான செயலமர்வின்போது, ஒரு துடிப்பான இளம் பயிற்சியாளராக, முதன்முதலில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. தொடர்ந்து இன்றுவரை அவருடன் ஒன்றிணைந்து பல நிகழ்ச்சித் திட்டங்களில் பணியாற்றி வருவதால் அவரிடம் உள்ள சிறப்பியல்புகளை அறியக்கூடியதாகவும் இருந்தது.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் மத்தியஸ்தர் குழு, தொழில்நுட்பக் குழு மற்றும் இளைஞர் அபிவிருத்திக் குழு போன்ற உப குழுக்களில் அவர் ஆர்வத்துடன் பங்கேற்றது மட்டுமல்லாமல் மலேசியாவில் நடைபெற்ற இலங்கை உதைபந்தாட்ட லீக்குகளின் செயலாளர்களுக்கான செயலமர்விலும் பங்குபற்றினார். இன்று *60* வயதை அடைந்திருந்தாலும், அதே துடிப்புடன் அவர் செயலாற்றுவதையும், திட்டங்கள் வகுப்பதையும் பாராட்டாமல் இருக்கமுடியாது.

*1972* ல் மகாஜனாக் கல்லூரியில் ஒரு கால்பந்தாட் வீரனாக அறிமுகமாகி *1977*ல் "வதிரி டையமண்ட்ஸ்" கழகத்திற்காக விளையாட ஆரம்பித்து, *1987* ல் அக்கழகத்தின் நிர்வாக சபை உறுப்பினராகியதுடன், *1993* தொடக்கம் *2013* வரை பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கில் செயலாளராகக் கடமையாற்றினார் என அறிகிறோம். *2014* ல் ஆரம்பிக்கப்பட்ட வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் செயலாளராக அதன் ஆரம்பத்திலிருந்து பணியாற்றி வருவதையும் காண்கின்றோம்..

எடுத்த காரியத்தை சிறப்பாகச் செய்து முடிக்கும் ஆற்றல், எந்தப் பிரச்சினையையும் சிரித்த முகத்துடன் எதிர்கொள்ளும் பக்குவம், எல்லோருடனும் அன்பாகப் பழகி தன்னைச் சூழவுள்ளவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலகலப்பாகவும் உற்சாகமாகவும் வைத்திருக்கும் பண்பு, பிரச்சினைக்குரியவர்களை சரியானமுறையில் அணுகி அவர்களைத் தன்னுடன் இணங்கிவரவைக்கும் சாமர்த்தியம் என்பன அவரிடம் காணப்படும் சிறப்பம்சங்களாகும். தனது அரச கடமைக்கும் அப்பால் ஓய்வு ஒழிச்சல் இன்றி கால்பந்தாட்டத்திற்கும், சமூக சேவைக்கும் தனது நேரத்தைச் செலவு செய்தது அவரிடம் காணப்பட்ட ஒரு தியாக மனப்பான்மையாகும்.

தனது லீக்கில் இணைந்துள்ள இளம் விளையாட்டு வீரர்கள், மத்தியஸ்தர்கள், பயிற்சியாளர்கள் போன்றோரை முன்னேற்றுவதற்காக பல முயற்சிகளை மேற்கொண்டார். இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தால் லீக்குகளுக்கிடையே நடாத்தப்பட்ட "Senior Inter Legue - 2010" போட்டியில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் Champion ஆகி சரித்திரம் படைத்ததற்கும், 2014 ல் வடமராட்சி உதைபந்தாட்ட லீக் உருவாகி இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தில் உறுப்புரிமை பெறுவதற்கும் முழு முயற்சியுடன் செயலாற்றியவர் என்றால் அது மிகையாகாது.

60 அகவையில் ஓய்வு பெறுவதென்பது அரச நியதி. அதற்கிணங்க அவர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும், தொடர்ந்தும் விளையாட்டுத் துறையிலும் சமூக சேவையிலும் ஈடுபாட்டுடன் செயலாற்றுவார் என்பது எனது நம்பிக்கை.

தனது ஓய்வு காலத்தில் குடும்பத்தாருடன் மகிழ்வாக வாழவும், குடும்பத்தாருக்கு உறுதுணையாக இருக்கவும் மனமார வாழ்த்துகின்றேன்

சூ. அன்ரனிப்பிள்ளை (கிளிபேட்)
உப தலைவர் – இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம்
முந்நாள் உப அதிபர் – சென். ஜோண்ஸ் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலகம் ஊடாக மக்கள் பெறும் நன்மைகளை பெற்றுத் தந்த நிர்வாகத்திறன் வாய்ந்த கிராமசேவகன்

அதிகாரங்களைப் பன்முகப்படுத்தி அரசாங்கத்தினால் தனது குடிமக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகள் பொருத்தமானவர்களுக்கு சென்றவடைவதை உறுதிப்படுத்தும் அமைப்பே பிரதேச செயலகம் ஆகும். சேவைகள் வழங்குவதற்காக அரசாங்கத்தினால் பல்வேறு அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான அமைப்புக்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக தமது செயற்றிட்டங்களை ஆற்றி வருகின்றன.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நிர்வாகிக்கப்படுகின்ற பிரதேச செயலகத்தில் பல்வேறு மத்திய, மாகாண அரச உத்தியோத்தர்கள் கடமையாற்றி வருகின்றார்கள். வேறு சில திணைக் களங்கள் தமது திட்டங்கள் பிரதேச செயலகம் மூலம் நிறைவேற்றுகின்றன. குறிப்பாகச் சொல்வதானால் இச்செயலகம் சில சந்தர்ப்பங்களில் இணைப்பாளராகவும் முகவராகவும், தொடர்பாளராகவும் கடமையாற்றி வருகிறது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் கிராம மட்டங்களில் கிராம உத்தியோத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இலங்கையில் 25 மாவட்டச் செயலகங்களும் 332 பிரதேச செயலகங்களும் 14022 கிராம உத்தியோத்தர்களும் கடமையர்றி வருகின்றார்கள். பிரதேச செயலகங்கள் தமது கிராமமட்ட உத்தியோத்தர்களூடாக அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகள் குடிமக்களுக்கு தெளிவு படுத்துவதோடு, மட்டுமல்லாமல் மறுபக்கமாக பொது மக்களின் பிரச்சினைகள் தேவைகளை அரச நிர்வாகத்துக்கு எடுத்துக் கூறி தேவைகளை நிறைவேற்றுகின்றார்கள். இங்கு பிரதேச செயலர் அவர்கள் அரசாங்கத்தின் பிரதிநிதியாக குடிமக்கள் மத்தியிலும் மறுபக்கம் பொதுமக்களின் பிரதிநிதியாக அரச மேல்மட்டத்திலும் கருதப்படுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகங்களினால் ஆற்றுப்படுத்தப்படுகின்ற சேவைகள், சமூக நலன்புரி சேவைகள், சமூக, பொருளாதார, அபிவிருத்தி நடவடிக்கைகள், கலை, பண்பாட்டை பேணிப்பாதுகாத்தல், விளையாட்டு அபிவிருத்தி, பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவு நடவடிக்கைகள், தேசிய அடையாள அட்டைப் பகுதி, இயற்கைப் பேரழிவு மற்றும் இடர்நிவாரண நடவடிக்கை ,தேர்தல் நடவடிக்கைகள்

போன்ற பல்வேறு செயற்பாடுகள் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. சில திணைக்களங்கள் தமது உத்தியோகத்தர்களை இங்கு நியமித்துச் செயலாற்றுகின்றார்கள். வேறு சில திணைக்களங்கள் தமது செயற்பாடுகள் தமது உத்தியோகத்தர்களை நியமிக்காமல் பிரதேச செயலகம் ஊடாக ஆற்றி வருகின்றார்கள். ஆனால் கிராம மட்டத்தில் கடமையாற்றுகின்ற கிராம உத்தியோகத்தர்கள் தனி ஒருவராகவே இவ்வளவு விசாலமான துறைகளை உள்வாங்கி தனது கிராமத்தில் கடமையாற்றி வருகின்றனர். இவர்களுக்கான கடமைகள் பொதுவாக வரையறுக்கப்பட முடியாதவை. இவற்றிற்கு மேலாக கிராமத்தில் சட்டம், ஒழுங்கு பேணுவதிலும் அமைதியை நிலைநாட்டும் பொறுப்புக்களும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அத்தேவைகளுக்கு இவர்கள் நீதிமன்ற உத்தரவுகளையும் செயற்படுத்தி வருகின்றனர். இதற்காக சமாதான உத்தியோகத்தர்களாகவும் நியமனம் பெற்றுள்ளார்கள்.

மேற்குறிப்பிட்டது போன்று கிராம உத்தியோகத்தர்களுக்கு இணைப்பு நடவடிக்கைகளுக்கு கையளிக்கப்பட்ட துறைகள் மிக விசாலமானவையாக உள்ளன. இதற்கமைய இவர் ஒரு சந்தர்ப்பங்களைப் பொறுத்து பாதுகாவலராகவோ, கிராம உத்தியோகத்தர்களாகவோ கடமையாற்ற வேண்டிய தேவை உள்ளது. மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு பங்களிப்புச்செலுத்தும் உத்தியோகதத்தர்கள் கிராம உத்தியோகத்தர்கள் தனது திறன்களை விருத்தி செய்வதினூடாக தனது ஆளுமையை வளர்த்தெடுப்பதினூடாக வெற்றிகரமான ஒரு கிராம உத்தியோகத்தராக பிரகாசிக்க முடியும்.

இந்த வகையில் தி.வரதராசன் ஒரு வெற்றிகரமான கிராம உத்தியோகத்தராக தான் கடமையாற்றிய கிராமங்களில் பொதுமக்களால் பெரிதும் கௌரவிக்கப்பட்டிருக்கின்றார். அதே நேரத்தில் மேலதிகாரிகளிடமும் நன்மதிப்பைப் பெற்றவர்.பிரதேச செயலகத்தில் சில வேலைத்திட்டங்கள் செயற்படுத்தும் பெரும் பொறுப்பு இவர் தலைமையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உ - தா : பிரதேச செயலக விளையாட்டு செயற்பாடுகளில் இவரது காத்திரமான நடவடிக்கைகள் காரணமாக இன்று பல வீரர்கள், உடற்கல்வி ஆசிரியர்களாகவும், விளையாட்டு உத்தியோகத்தர்களாகவும் பயிற்றுனர்களாகவும் கடமையாற்றுகின்றார்கள். அத்துடன் மட்டுமில்லாமல் விளையாட்டுத்துறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது சேவை பிரதேச மட்டத்துக்கு மேலாக மாவட்ட மட்டம் மாகாண மட்டங்களிலும் வெற்றிகள் பெறப்பட்டிருக்கின்றது என்பது பெருமைப்பட வேண்டியது.இவர் தான் கடமையாற்றிய கிராமங்களில் தனது நேர்மையான, ஆளுமையான நடவடிக்கைகளினால் அங்கு பல நலன்புரி நடவடிக்கைகளையும், அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்ததை பிரதேச செயலகம் உணர்ந்துள்ளது.

இயற்கை அழிவுகள் ஏற்பட்டு மக்கள் இடர் உள்ள காலங்களில் மக்களோடு மக்களாக சென்று கடமையாற்றியதை உணரகூடியதாக இருந்தது. இடர் ஏற்படுகின்ற காலங்களில் கள நிலைமைகளை மேலதிகாரிகளினூடு உடனுக்குடன் அறிவித்து அதனூடாக மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதில் இவரது சேவை அர்ப்பணிப்பு சம்பந்தப்பட்டோரால் பெரிதும் பாராட்டப்பட்டது.

சிறந்த நேர்ச்சிந்தனையுடன் கூடிய நிர்வாகத் திறமையின் மீது நம்பிக்கை வைத்து இடம்பெயர்ந்த மக்களுக்கு சேவையாற்றுவதற்கு நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்ட போது இவரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இவரது நிர்வாகத்திறமை காரணமாக நலன்புரி நிலையம் யாழ் மாவட்டத்தில் பலராலும் பாராட்டப்பட்ட ஒன்றாக இருந்தது.கிராம மட்ட உத்தியோகத்தராக இருந்தாலும் இவரது சேவைத்திறன் பிரதேச செயலக மட்டத்தில் மட்டுமல்லாது மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் பாராட்டப்பட்ட சம்பவங்கள் உள்ளன.இதனடிப்படையில் கிராம உத்தியோகத்தர்களின் யாழ் மாவட்ட சங்கத்தினது தலைமைப்பதவி இவரைத்தேடி வந்தது. அதே போன்று பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்திலும் தலைமைப் பதவி இவரைத் தேடி வந்தது என்பது நிதர்சனமாகும்.

அதே போன்று பிரதேச செயலகத்தில் நிர்வாக கிராம அலுவலர் பதவி வெற்றிடமாக வந்த போது பிரதேச செயலர் இவரிடம் அப்பதவியை ஒப்படைத்தது இவரது நிர்வாகத் திறமைக்கு உதாணரமாக உள்ளது. இவர் அரச உத்தியோகத்தராகக் கடமையாற்றி போது சகலராலும் பாராட்டப்பட்ட ஒரு வெற்றிகரமான உத்தியோகத்தர் ஆவார். இவரது சேவை இன்னும் பல வருடங்களுக்கு பேசப்படும் பொருளாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இவர் அரச உத்தியோகத்தர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றுச்சென்றாலும் தனது சேவையைத் தொடர்ந்து ஆற்ற வேண்டும் அதற்காக இவருக்கு ஆரோக்கியமாக வாழ்வினைக் கொடுக்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து நண்பன் தி.வரதராசனுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு ஏ.மு.சண்முகநாதன்**
**ஓய்வு நிலை நிர்வாக கிராம அலுவலர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க நிர்வாக கட்டமைப்பில் கிராம அலுவலர்களின் வகிபாகமும் அரச சேவையில் திரு.தி.வரதராஜன் அவர்களும்

அரசாங்க நிர்வாக கட்டமைப்பில் அரசுடன் மக்களை தொடர்புபடுத்தும் முதலாவதுபிணைப்பாக செயற்படுபவர்கள் கிராமஅலுவலர்கள் ஆவர். கிராமம் ஒன்றில் அரச நிர்வாகத்தை நேரடியாக செயற்படுத்தவும், கிராமத்தின் தேவைகள், தரவுகள், அறிக்கைகள், அபிவிருத்தி போன்ற பல்வேறு தரப்பட்ட விடயங்களை உத்தியோக பூர்வமாக அரச உயர் மட்டங்களுக்கு நிர்வாக கட்டமைப்பின் ஊடாக வழங்கும் பொறுப்புக் கிராம அலுவலர்களையே சார்ந்து நிற்கின்றது. இந்த வகையில் இலங்கையின் அரச நிர்வாகத்தின் கிராம சேவகர்களின் பணி மிகவும் இன்றியமையாத தொன்றாக உள்ளது.

மேலும் சமாதான அலுவலர்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இவர்கள் அரசியல் உரிமை அற்றவர்களான பொதுமக்களுக்கு எந்நேரத்திலும் அவர்களின் தேவைகளை நிறைவு செய்து வழங்குவதற்கும் அதேபோல் அரச நிர்வாகத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் நியமிக்கப் பட்டுள்ளமை குறிப்பிட வேண்டிய தொன்று. இவர்களின்பணிகளை சுருக்கமாக நோக்குவோமானால்.

1. கிராமத்தில் நடைபெறும் குற்றங்களை விசாரணை செய்து உரியவர்களுக்கு அறிக்கைப்படுத்தல்
2. அரசினால் காலத்திற்குக் காலம் நடைமுறைப்படுத்தப்படும் சமூக நலனோக்கு திட்டங்களை செயற்படுத்துதல்.
3. அனர்த்தம் மற்றும் இடர்களுக்கான முன்னாயத்த செயன்முறைகளை வழிவகுத்தல் மற்றும் அனர்த்தம், இடர்களின் போது பணியாற்றுதல், அறிக்கையிடல்
4. தேர்தல் பணிகளும், வருடாந்தம் வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பணிகள்.
5. குடித்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் காலத்திற்குக் காலம் நடைமுறைப் படுத்தப்படும் புள்ளிவிபரக் கணக்கெடுப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. அரச காணிகள் மற்றும் தனியாள் காணிகள் தொடர்பான கடமைகள்
7. பதிவாளர் நாயகத்திணைக்களத்தின் கீழ், பிறப்பு, இறப்பு தொடர்பான பதிவுகள் மற்றும் பதிவுகளை உறுதி செய்தல்
8. மதுவரித்திணைக்களம் சார்ந்த, சட்ட விரோத மது உற்பத்தி, போதைப்பொருள் பாவனை தொடர் பான கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல்.
9. பெறுமதி மற்றும் வருமான சான்றிதழ் வழங்குதல் மற்றும் உறுதி செய்தல்
10. வன பரிபாலனை திணைக்களத்தின் கீழ் காடுகளை, மரங்களைப் பாதுகாத்தல், மரம் தறிப்பதற்கான சிபார்சுகளை வழங்குதல்
11. ஆட்பதிவு திணைக்களத்தின் ஆள் அடையாளத்தைப் பெற்றுக்கொள்வதன் நிமித்தம் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்பத்தினை சிபாரிசு செய்தல்
12. பிரிவின் குடும்ப விபரம், சனத்தொகை மற்றும் வேறு பொருத்தமான தரவுகளை பேணுதலும் அவற்றை வரைபுபடுத்தலும்
13. வதிவிட மற்றும், குணநல சான்றிதழ்களை வழங்குதல்
14. ஓய்வூதிய திணைக்களம் சார்ந்த கடமைகள்
15. அரச சேவைகளின் நிமித்தம் பொதுமக்களின் எந்தவொரு விடயத்தையும் உத்தியோக பூர்வமாக உறுதி செய்தல்

போன்ற பிரதான பணிகளை குறிப்பிட முடியும். அத்துடன் கிராம அலுவலர் ஒருவர் பின்வரும் குணாதிசயங்களையும் கொண்டமைந்திருத்தல் அத்தியாவசியமாகும்.

1. நேர்மை, உண்மை பேசுதல்
2. கருணை/பக்கச் சார்பற்றிருத்தல்
3. சட்டங்களை மதித்தல்
4. அர்ப்பணிப்பு
5. தூய்மை பிறக்கும் சிறந்த நேர்மை
6. நேரந்தவறாமை
7. நல்லுறவு
8. மதிப்பளித்தல்
9. முன்மாதிரியாக இருத்தல்
10. மொழியாற்றல்
11. விவேகம் மற்றும் தற்துணிவு
12. முடிவுகளை மேற்கொள்ளும் திறன்.

மேற்கூறப்பட்டவாறு கிராம அலுவலர் ஒருவர் எவ்வாறு அமைவுப் பெற வேண்டுமோ அவ்வாறு சகல தேவைப்பாடுகளையும் கொண்டமைந்திருந்து எதிர்வரும் 2017.01.13 ஆந்திகதி தனது 35 வருடக கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச சேவையை மக்களுக்காக வழங்கி ஓய்வு பெற்றுச்செல்லும் "வரதன் G.S" என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் கரவெட்டிப்பிரதேச செயலகத்தின் நிர்வாக கிராம அலுவலர் திரு.திரவிய சிங்கம் வரதராசன் என்றால் அது மிகையாகாது.

**1957.01.13** ஆந் திகதி வதிரி, அல்வாய் தெற்கில் பிறந்தவர் தனது **25** ஆவது வயதில் **1982.02.10** ஆந்திகதி விசேட சேவை உத்தியோகத்தராக அரச சேவையில் தன்னை இணைத்துக்கொண்டார்.

அதன் பின் **1987.06.01** ந் திகதி முதல் கிராம அலுவலர் சேவைக்கு உள்வாங்கப்பட்டு கிராம அலுவலராக கரணவாய் கிழக்கு, கரவெட்டி தெற்கு, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி மேற்கு, அல்வாய் தெற்கு, மத்தொனி, கப்பூது, அத்தாய் போன்ற பல கிராம அலுவலர் பிரிவுகளில் மக்களுக்கான பணிகளை சிறந்த முறையில் ஆற்றிவந்தார். சிறந்த உதைபந்தாட்ட வீரரான இவர் தனது சேவைக்கு மேலதிமாக வடமராட்சி மண்ணில் உதைபந்தாட்டம் வளர்வதற்கு பல்வேறு வழிகளிலும் பங்காற்றியிருந்ததுடன் தனது ஊர் சார்ந்த பல தரப்பட்ட பொதுப்பணிகளிலும் தன்னை ஈடுபடுத்தி தனது கிராமத்தின் அபிவிருத்திக்கும் பெரும் பங்காற்றியிருந்தமை சுட்டிக்காட்ட வேண்டிய தொன்று.

அதே போன்று பிரதேச செயலகங்களின் விளையாட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாத சந்தர்ப்பங்களில் பிரிவின் விளையாட்டு தொடர்பான பணிகளையும் முன்னின்று செயற்படுத்தி யிருந்ததுடன், யுத்த காலத்திலும் துணிவுடன் மக்களுக்கு வேண்டிய சந்தர்ப்பங்களில் அவர்களின் தேவைகளை நிறைவு செய்வதில் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. யுத்தத்தின் பின் மக்கள் மீளக் குடியமர்ந்தபோது பிரிவு மக்களுக்கான தேவைகளை காலத்திற்கு காலம் நிறைவு செய்திருந்ததுடன் மக்கள் தங்க வைக்கப்பட்டிருந்த நலன்புரி முகாம்கள் தொடர்பான கடமைகளையும் சிறப்பாக ஆற்றியிருந்தார். கரவெட்டி பிரதேச செயலர் பிரிவின் கீழ் மிகவும் பின்தங்கியிருந்த ஏனைய கிராம அலுவலர்கள் பொறுப்பேற்பதற்கு பின் நிற்கும் பிரிவுகள் விரும்பி பொறுப்பேற்று அங்குள்ள மக்களுக்கு சிறப்பான சேவைகளை தனது சேவைக்காலத்தில் வழங்கியிருந்தமை அவரது மக்கள் சேவைக்கு எடுத்துக்காட்டாகும்.

இறுதியாக அவர் கிராம அலுவலராகப் பணியாற்றிய அவரது வதிவிடப்பிரிவான அல்வாய் தெற்கு பிரிவில் பிரதேச செயலரின் எண்ணக் கருவான ஒரு இடத்தில் கிராம மட்ட அலுவலர்களை கிராம அலுவலர் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருததி உத்தியோகத்தர் ஆகியோர் இணைந்த மக்களுக்கு சேவையை வழங்குதல் என்றதன் அடிப்படையில் கிராமிய செயலகம் ஒன்றை முன்மாதிரியாக அமைத்து மக்களுக்கு இலகுவான நிறைவான சேவையை வழங்கியிருந்தமையை யாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்க முடியாது. தனது பதவிக்குரிய கடமைகளுக்கு மேலதிகமாக பிரதேச செயலகத்தின் சகல நடவடிக்கைகளிலும் தன்னை ஈடுபடுத்தியிருந்ததுடன் பிரதேச செயலக நலன்புரி சங்கத்தின் தலைவர் பதவி உட்பட பல்வேறு பதவிகளின் காலத்திற்கு காலம் தன்னை இணைத்த அலுவலர்களின் நலனுக்காகவும் அரும்பாடு பட்டிருந்தமை பாராட்டப்பட வேண்டிய தொன்று. அத்துடன் யாழ்மாவட்ட கிராம அலுவலர் சங்கத்திலும் தலைவர் உட்பட பல பதவிகளை வகித்து தனது சக அலுவலர்களது நலனுக்காகவும் தன்னை அர்ப்பணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பிரதேச செயலகத்தின் பதவிநிலை அலுவலர்கள் உட்பட யாவராலும் விரும்பப்படும் திரு.தி.வரதராசன் அவர்கள் தானும் சக உத்தியோகத்தர்கள் ஆற்றும் ஏனைய சகல அலுவலர்களுடனும் நல்ல உறவையும், அரச சேவையாளனுக்கு ஒரு முன்மாதிரியாகவும் தனது சேவைக்காலத்தில் திகழ்ந்து வந்திருந்தமை எவராலும் மறக்க முடியாது.

தனது கிராம அலுவலர் சேவையில் **2002.06.01**ம் திகதி தரம் **1**இற்கு உயர்வு பெற்ற இவர் பிரதேச செயலகத்தில் நிர்வாகக் கிராம அலுவலருக்கான பதவி வெற்றிடம் ஏற்பட்ட போது சேவைமூப்பு, பொதுமக்கள் மற்றும் ஏனைய அலுவலர்களிடையேயான நல்லுறவு தலைமைத்துவம், கடமை பற்றிய தெளிந்த அறிவு போன்ற பல சிறப்பம்சங்களை உள்ளடக்கிய ஒருவராக சேவையாற்றி வந்திருந்ததன் அடிப்படையில் பதில் நிர்வாக கிராம அலுவலர் பதவிக்கு சிபார்சு செய்யப்பட்டார். அவரது சிறந்த சேவைக்கு பலனாகவும் அவரைப் பெருமைப்படுத்தும் வகையிலும் நிர்வாக கிராம அலுவலராக நியமனம் பெற்று தனது சேவையை சிறப்பாக ஆற்றி வந்ததுடன் அதற்கு சான்றாக கரவெட்டிப் பிரதேச செயலர் **2014, 2015**ம் ஆண்டுகளில் தேசிய உற்பத்தித்திறன் போட்டியில்இரண்டாம் இடத்தை பெற்றிருந்தமை சிறப்பான தொன்றாகும். இவ்வாறு கிராம அலுவலர் ஒருவர் எவ்வாறு மக்களுக்கு சேவை செய்ய முடியும் என்பதற்கு முன்மாதிரியாக இருந்த திரு.தி.வரதராசன் அவர்கள் தனது ஓய்வு காலத்தினுள் விடாது வடமராட்சி சமூகத்திற்கு தனது சேவையை வழங்க வேண்டும் என்று விரும்புவதுடன் எல்லாம் வல்ல இறைவன் அதற்கான அருளையும் ஆசியையும் தொடர்ந்து வழங்க வேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றேன்.

"உனது மனச்சாட்சிக்கு கட்டுப்பட்டு உண்மையுடன்
சேவை செய்தால் உயர்வும் மனநிறைவும் உன்னைத் தேடி வரும்"

**திரு.மா.முரளி**

**நிர்வாக அலுவலர், தென்மராட்சி பிரதேச செயலகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாகத்திறன் கொண்டவர்

விளையாட்டு மக்களை இணைக்கும் ஒரு பாரிய ஊடகம் என பல அறிஞர்கள் கூறியுள்ளனர். எனக்கும் நண்பன் தி.வரதராசனை விளையாட்டுத்துறை ஊடாகவே சந்தித்தேன்.

1987ல் கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு விழா கோலாகலமாக நடைபெற்றது. உதைபந்தாட்டத்தின் இறுதிப்போட்டியும் மெய்வல்லுநர்கள் போட்டிகளின் இறுதிப்போட்டியும் ஒரே நாளில் நடாத்திய பல ஆயிரக் கணக்கான மக்கள் மத்தியில் பரிசளிப்பும் நடைபெற்றது. அக்கால மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்றுனர் அமரர் A.S.குணரட்ணம் அவர்களும் விசேட சேவை அலுவலராக திரு.தி.வரதராசன் அவர்களும் இப்போட்டிகளை நெறிப்படுத்தியதை என்னால் அவதானிக்க முடிந்தது. ஒரு விளையாட்டு அனுபவம் இல்லாத பிரதேசத்தில் 1994 வரை பிரதேச போட்டிகளை நடாத்திய பெருமை இவரையே சாரும். ஏனைய பிரதேசங்களை விட கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவிலேயே சிறப்பான விழாவாக நடைபெறுவதை காணலாம்.

இக்காலத்தில் போட்டிகளிலே பங்குபற்றிய பலர் இன்று விளையாட்டுத்துறை சார்ந்த தொழிலை செய்வதைக் காண முடியும். இக்காலத்தில் விளையாட்டு அலுவலர் இல்லையே என்று போட்டிகளை நடாத்தாது விட்டிருப்பின் பலர் தங்கள் சந்தர்ப்பங்களை சிறந்திருப்பர்.

வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத்துறையின் உதவிப் பணிப்பாளர் பதவிக்கு நான் செல்வதற்கு காரணமானவர்களுள் இவரும் ஒருவர் அந்நாளில் எனது திறமைகளையும் எனது செயற்பாடுகளையும் எதிர்காலத்திட்டங்களையும் ஒரு கையெழுத்து நூலாக வடிவமைத்து தந்தவர் திரு.தி.வரதராசன். அந்நூல் மாகாண செயலாளரினால் விதந்துரைக்கப்பட்டதையும் இவ் வேளையில் தெரிவிக்க வேண்டும். ஒரு கணணி அச்சுப் பதிப்புக்கு ஒப்பாக கையெழுத்தில் வடிவமைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


1996ஆம் ஆண்டில் நான் மாவட்ட விளையாட்டு அதிகாரியாக இருந்தவேளை மாவட்டத்தின் விளையாட்டுச் சங்கங்களை புனரமைக்கப்படவேண்டிய தேவை ஏற்பட்டது. அப்போது சிறப்பாக இயங்கிய லீக் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக். அவர்களது வேலைத்திட்டங்கள் அனைத்துமே சிறப்பாக இருந்தது. அதனை திறம்பட இயக்கியவர் தி.வரதராசன் நீண்ட கால அனுபவமும் ஆற்றலுமே. அதன் இயக்கத்துக்கு காரணமானது விளையாட்டுத் திணைக்களத்துடனும், கல்வி வலயங்களுடனும் இணைந்து இன்று வரையும் செயலாற்றுகின்ற ஒரு லீக்காகவே இயக்குகின்றது.

1999ம் ஆண்டு உதயன் பத்திரினை அனுசரனையோடு பாடசாலைகள் மட்டத்தில் 19 வது பிரிவின் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடாத்தியதன் பலனாக பல பாடசாலை வீரர்கள் கழகங்கள் இனம் காண உதவியது.

K.W.விமலராஜன்

ஓய்வுநிலை உதவிப்பணிப்பாளர் மாகாண விளையாட்டு அமைச்சு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமையின் ஓர் அங்கமாக ஹாட்லியின் பயிற்றுவிப்பாளர்...

எனது சிறுபராயத்தினை நினைத்துப் பார்த்தபோது ஒரு விடயத்தினை சிந்திக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அதாவது மணிவிழா நாயகனான திரு தி.வரதராசன் அவர்களை எனக்கு எப்படி தெரியும். எனக்கும் என் குடும்பத்துக்கும் இடையில் அவரின் உறவு வலுப்பெறுவதற்கு என்ன காரணம் என்று சிந்தித்தேன். பல சந்தர்ப்பங்களில் பல அரசியல் தலைவர்களும், புலமையாளர்களும் கூறினார்கள் விளையாட்டின் மூலம் உறவுகளை வலுப்படுத்த முடியும் என்று. அதன் அடிப்படையில் வலுவடைந்தது வரதண்ணாவிற்கும் எமக்கும் இடையிலான உறவு. அந்த உறவை இறுக்கமாக்கிய விளையாட்டு உதைபந்தாட்டம். எனது சிறுபராயத்தில், கிட்டத்தட்ட 1980களிலும் அதன் பின்னரான காலப்பகுதி களிலும், வடமராட்சியில் நடைபெறும் உதைபந்தாட்டப்போட்டிகளை பார்வையிடுவதற்காக எனது தந்தை (திரு.எஸ்.யேசுநாயகம் - ஒய்வு நிலை ஆசிரியர்) அவர்கள் என்னையும் அழைத்துச் செல்வார். அந்த நாட்களில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் விளையாடும் போட்டிகளில் அவரைக் காண்கின்றேன். இதுவே அவரை முதலில் கண்ட சம்பவங்காளாக அமைகின்றன.

ஆனால் அந்த நாட்களில் அவருடன் நேரடியாக பழகும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. உதைபந்தாட்டத்தில் எனக்கு இருந்த ஆர்வம் காரணமாக பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் அணியில் நான் இணைந்திருந்தபோதே அவர் எமது கல்லூரியின் உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளராக நியமனம் பெற்றார். அதன்பின்னரே வரதன் சேர் ஆக அவருடன் நெருங்கி பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது.

1990களின் ஆரம்பமாக அந்தக் காலப்பகுதி அமைந்திருக்க வேண்டும் என்று நினைக்கின்றேன். அக்காலத்தில் ஹாட்லியின் அணிகளுக்கு புகழ் பெற்ற வீரரும், புகழ்பெற்ற பயிற்றுவிப்பாளருமான அமரர் இரத்தினசிங்கம் ஆசிரியர் அவர்கள் பயிற்றுவிப்பாளராக கடமை புரிந்தார். சமகாலத்தில் எமது கல்லூரியின் பயிற்றுவிப்பாளராக வரதண்ணாவும் கடமை புரிந்தார். ஆசிரியர் இரத்தினசிங்கம் ஓய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற நிலையில் ஹாட்லியின் பிரதான பயிற்றுவிப்பாளராக தனது கடமையை தொடர்ந்தார். இரத்தினசிங்கம் ஆசிரியர் அவர்களால் வழங்கப்பட்ட பயிற்சியை போன்ற தரமான பயிற்சியை வரதண்ணா வழங்கியதன் காரணமாக ஹாட்லி அணிகள் அன்றைய காலப்பகுதியில் பல்வேறு சுற்றுப்போட்டிகளில் வெற்றி பெற்றது. அன்றைய காலப்பகுதியில் வெளிக்கழகங்கள் விளையாடும் போட்டிகளுக்கு சமமானதாக பாடசாலை உதைபந்தாட்டம் பிரசித்தி பெற்றிருந்தது.

மாணவ வீரர்களுடன் மென்மையான போக்கினையே இவர் கடைப்பிடிப்பார். எந்த சந்தர்ப்பத்திலும் எவரையும் கண்டித்ததையோ தண்டித்ததையோ நான் அறியவில்லை. பயிற்சியின் போது ஒரு நண்பனைப்போல அவர் பழகியதால் வரதன் சேர் வரதண்ணாவாக மாறினார். உதைபந்தாட்ட உத்திகளை ஒரு நண்பனைப் போல கற்பித்தார். வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகத்தில் வரதண்ணா விளையாடிய போது அவர் நீண்ட காலமாக சிறந்த கோல்காப்பாளராக இருந்தார். அதேபோல சிறந்த மத்தியஸ்தராகவும் அவர் காணப் பட்டார். நானும் பல போட்டிகளில் அவருடன் இணைந்து மத்தியஸ்தராக கடமையாற்றியுள்ளேன். எனக்கு பெருமை சேர்க்கும் விடயமாக இது உள்ளது. **1993** இல் பருத்தித்துறை மத்தியஸ்தர் சங்கடத்திற்கு மத்தியஸ்தர்களை இணைக்கும் பரீட்சை நடத்தப்பட்டது. இதற்கான வினாப்பத்திரத்தை தயாரிக்கும் பொறுப்பை என்னிடம் விட்டிருந்தார். எனது சிறுவயதில் அவர் அந்த பொறுப்பினை ஒப்படைத் திருந்தமை எனக்கு கிடைத்த பாக்கியம்.

இவரது மறுபுறம் கிராம சேவகர் என்ற பொறுப்புள்ள பணி. அதில் அர்ப்பணிப்புடனான சேவை காரணமாக பலராலும் மதிக்கப்படுகிறார்.போர்க்காலத்தில் மக்கள் இடம்பெயர்ந்தபோது இவரது பிரிவில் இருக்கும் பாடசாலைகளில் மக்கள் தங்க வைக்கப்பட்ட போது இரவு பகல் பாராது மக்களுக்கு சேவை புரிந்தார். முகாம்களில் இரவுவேளைகளிலும் தங்கியிருந்து சேவையாற்றினார். இந்த தருணங்களில் எம்மையும் தன்னுடன் இணைத்திருந்தார். அதனால் மக்களுக்கு சேவையாற்றும் சந்தர்ப்பம் எமக்கும் கிடைக்கப்பெற்றது. இவ்வாறாக இவருக்கும் எனக்குமான பிணைப்பு இறுக்கமாகி அவரும் மனைவி சிவா அக்காவும் குடும்பத்தின் தவிர்க்கமுடியாதவர்களாகி விட்டனர்.

இன்று அவரின் பணி ஓய்வில் கௌரவிக்கப்படுகின்றார். அவரையும் குடும்பத்தையும் இறைவன் ஆசீர்வதிப்பதோடு எமது சமூகத்திற்கும் உதைபந்தாட்டத்திற்கும் ஆற்றிய சேவைகளை பாராட்டும் அதே வேளை அவர் தொடர்ந்தும் இறைவனின் ஆசிர்வாதத்துடன் சமூகத்திற்கும், உதைபந்தாட்டத்திற்கும் சேவைகளை தொடர வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**- திரு. யே அன்டனி சுதாகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு.சி.க.இராஜேந்திரனின் மனப்பதிவு

அரசசேவையிலிருந்து **2017.01.12** முதல் ஓய்வு பெற்ற எனது அன்பிற்குரிய திரு.திரவியசிங்கம் வரதராசன் அவர்களை நான் அவரின் சிறு பராயத்திலிருந்தே நன்கு தெரிந்து கொண்டதுடன் அவரின் பலதுறை சார்ந்த செயற்பாடுகளிலும் மிகவும் ஆர்வமாக செய்யப்பட்டமையை நேரடியாகவும் கண்டுள்ளேன்.

விளையாட்டுத்துறை சம்பந்தமா ஒரு தடவை அவர் கல்வி கற்ற மகாஜனாக் கல்லூரி உதைபந்தாட்ட அணிக்காக வலது பக்க நிலை விளையாடுவதாகக் கண்டு அதிசயப்பட்டேன். காரணம் நான் அவரை ஒரு திறமையான கோல் காப்பாளராகக் கருதியிருந்தேன்.

தி.வரதாராசன் அவர்களுடன் நான் பல வருடங்களாக நிர்வாக மட்டத்தில் பல தொடர்பு வைத்திருந்தேன். தமிழ் மன்றம் டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றில் செயலாளராக நான் பதவி வகித்த காலங்களில் தி.வரதராசன் அவர்கள் நிர்வாக செயலாளராக கடமை ஆற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. இதே போன்று பருத்தித்துறை உதைபந்தட்ட லீக்கிலும் எனக்கு உதவியாகச் செயற்பட்டு வந்துள்ளார். தி.வரதராசனிடம் எந்த வகையான செயற்திட்டத்தினையும் நம்பி வழங்கலாம். அத்தகைய பொறுப்பும், செயற்படுத்துவதில் திறமையும் கொண்டவர்.

வடமராட்சியில் நாம் இருவரும் வதிரி தமிழ்மன்றம் டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றிலும் வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கில் நான் செயலாளராகவும் திரு.வரதராசன் நிர்வாகச் செயலாராகவும் செயற்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஒரு செயல் வீரனை பாராட்டுவதிலும் கௌரவிப்பதிலும் நான் மிகவும் பெருமைப் படுகின்றேன், மகிழ்ச்சியடைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தமிழ் மன்றத்தில் செயலாளராக இருந்து செயற்படும் போது ஆரம்பத்தில் அமரர் இராஜஸ்ரீகாந்தன் எவ்வாறு செயற்பட்டாரோ அதே போன்று திரு.வரதராசனும் நிர்வாகச் செயலாளராக இருந்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. அவர்கடமை புரிந்த செயலகத்தின் பிரதான அதிகாரிகள் அவரின் நடத்தை பற்றியும், அவரிடம் வழங்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதில் மிகவும் பொறுப்புடனும், சிறப்பாகவும் செய்யக்கூடிய ஆற்றல் படைத்தவர் கூறுவதை கேட்கும் போது நான் மிகவும் மகிழ்வடைவேன். அத்தகைய ஒருவருக்கு அவரது நலன் விரும்பிகள் நன்றி சார்ந்த கௌரவிப்பு விழாவினை ஏற்பாடு செய்தமையை அறிந்து எனது மனம் பூரிப்படைகின்றது.

எனது அன்பிற்குரிய வரதராசனுக்கு நான் அறியத்தருவது உனக்கு எது சரியெனத் தெரிகின்றதோ அதனைத் துணிந்து செய் அது உனக்கு மேன்மையைத் தரும்.

***

# புகழ்பூத்த மனிதரே

எம் இனிய நாட்டினிலே எங்கும் புகழோங்கிடவே
ஏற்றமுடன் வாழ்ந்தவரே நீவிர் என்றுமே
தம்மின உறவுகள் தளைத்து ஓங்கிடவே
தன்னையே சேவைக்கென அர்ப்பணித்தவரே

வாதும் வழங்கும் நிறைவஞ்சக உலகினிலே
வல்லவராய் யாவரும் வாழ மக்களை
சூதுவாதின்றி வழி நடாத்திய செம்மலே
சொர்க்க வாசலே உங்களை வரவேற்குமே.

கரணவாய் கப்பூது கரவெட்டி மக்களிற்கு
கள்ளம் கபடமின்றி ஆற்றிய சேவைக்கு
தரமான தங்கமெடல் ஏனைய நல் பரிசில்கள்
தந்தும்மை மனமாரப் பாராட்டி மகிழ்ந்தார்கள்.

பாமரர்க் கொரு நீதி பணக்காரர்க்கொரு நீதி
பாராமல் வீரர்களைத் தயார் செய்தவரே
சாமரை வீசி உன்னை தவறாது வர வேற்கின்றோம்.
சரித்திரப் புகழ்பெற வைத்தவரை வாழ்த்துகின்றோம்

கொழும்பு யாழ் உதைபந்தாட்ட சபைகளிலே
கொமிற்றி மெம்பராய் நீண்ட நாளிலிருந்து
வழுவின்றிச் செயலாற்றி புகழ்பூத்த மனிதரே
வாழ்த்துகின்றதே உதைபந்தாட்ட சம்மேளனம்

புலவரும் வீரரும் பொதுமாந்தரும் கூடிபோற்றி
நீ செய்த பணிகளை நன்கு தேடி
பலமுடன் வாழ்த்தி மீண்டும் உனைநாடி
பார்புகழ் வைப்பீரென வேண்டுவரே உனைத்தேடி.

- அதிஸ்டன் (வதிரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை மனங்கொண்ட வரதனே வாழி வாழி!

திரவிய சிங்கமும் திகழ்நவ மணியுமாய்
வரமாக எமக்கீய்ந்த வரதனே! அரணாக
நிற்பவனே! சேவைகளின் அகராதியே! எந்நாளும்
தற்பெருமை கொள்ளாத தலைமைத்துவம் தெரிந்தவனே!

கல்வியும் விளையாட்டும் கிராமத்தின் முன்னேற்றமும்
கல்லும் கருந்துருகும் கனிவான பேச்சும்
எல்லைகள் தாண்டியே ஏற்றபணி ஆற்றிடும்
வல்லமைகள் நிறைவான வரதராஜனே! வளர்கவே!

ஆற்றிடும் சேவையறிந்து ஆண்டவன் உவந்தளித்த
அறிவுசார் கிராம சேவகர் பதவியாகும்
ஏற்றிட்ட பொறுப்புக்களை நீதிவழுவாது செய்திடவே
எந்நாளும் ஓய்வின்றிச் செயல்பட்ட கருமவீரனே!
உற்றவர் உறவினர் என்றபேதம் எதுவுமின்றி
உன்னை தேடிவருபவரை அன்பாக வரவேற்பவனே!

சற்றேனும் சளைப்பின்றி அவர்தம் தேவைகளை
சரியாக வழிகாட்டி நிறைவாக்கித் தருபவனே!

ஆன்மீகத்தில் தூய்மையும் விளையாட்டில் சாணக்கியமும்
ஆயகலை யாவிலும் இமயமாய் வாழ்பவனே!
மேன்மைகள் உனைச்சேர பொதுச் சேவைகளுடன்
மதிப்புயர் மட்டங்களில் தொடர்புகள் கொண்டவனே!
வாழ்புகழ் வையகமும் மதித்திடவுன் செயல்களுக்கு
வளங்களாக மனையாளும் மக்களும் வாய்த்தனரே!
தேன்சொரியும் மலர்ச்சோலை பூவற்கரைப் பிள்ளையாரின்
துணையுடன் ஆண்டுகள் பலநூறு வாழியவே!

உள்ளத்தில் ஒளிவின்றி உயர்வான சிந்தனையால்
அள்ளிடக் குறையாத அறிவும் கொண்டவனே!
துள்ளித் திரிபவனே! துஞ்சாத மனத்தோனே!
வெள்ளை மனங்கொண்ட வரதனே வாழி வாழி

**சிவ.கணேசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரதராஜன் சமூகச்செயற்பாட்டாளர்

வடமராட்சியிலே கலை இலக்கியம் கல்வி கலாசாரம் விளையாட்டு முதலிய துறைகளில் சிறப்புடன் விளங்கும் கிராமமாகிய வதிரியில் முன்னோர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி பயனுள்ள காரியங்களை ஆற்றி வருகின்றவர் திரு.வரதராஜன் அவர்கள். அவரிடத்தில் வெளிப்படுகின்ற பன்முக ஆளுமையானது எந்தவொரு விடயத்தையும் வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கான ஆற்றல்களைத் தந்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். பாடசாலைக் காலத்திலிருந்து இன்றுவரை காட்டிவருகின்ற ஈடுபாடுகளும் அவற்றின் வழியே பெற்றுக்கொண்ட அனுபவங்களும் இத்தகைய இயல்புகளுக்கு காரணமாக அமைந்துள்ளன.

திரு வரதராஜனிடம் காணப்படுகின்ற ஆற்றல்களில் முதன்மையானது எதனையும் தொடங்கும் ஆற்றலாகும். எடுத்துக்கொண்ட விடயத்தை நன்கு தீர்மானித்து திட்டமிட்டுச் செயற்படுத்துவதில் நிகரற்றவர். அவர் ஆற்றிவருகின்ற பல்வேறு பணிகளில் இத்தகைய பண்புகளை நிதர்சனமாகக் காணலாம்.

ஒருவருடைய செயற்பாடுகளின் வெற்றிக்கு ஈடுபாடும் அர்ப்பணிப்பும் முக்கியமானவை. அவற்றை நன்கு எண்ணித் துணிபவர். விமர்சனங்கள் எவையாயினும் அவை பற்றிய பெருமிதமோ அல்லது துவண்டு விடும் தன்மையின்றி எடுத்த விடயத்தில் எதிர்ப்பார்த்த இலக்கினை நோக்கி செல்லும் தற்துணிவு படைத்தவர். அவர் சமூகத்தின் மீதும் மக்கள் மீதும் கொண்டிருக்கும் பற்றுறுதி இவற்றுக்கு உந்து சக்தியாக விளங்குகின்றது. நினைத்தவற்றைச் செயற்படுத்துவதற்கான சூழலை உருவாக்கி அதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தும் ஒருவராக பல வெற்றிகளைக் காண்பார் என்பதற்கு திரு.வரதராஜன் சிறந்ததொரு உதாரணமாகத் திகழ்கின்றார்.

வரதன் அவர்கள் தமது சமூகப் பணிகளை ஓர் இளைஞர் சேவை அலுவலராக ஆரம்பித்து, பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமசேவை உத்தியோகத்தாராகச் சேர்ந்து கொண்டார். இந்த இரண்டு பணிகளும் இளைஞர்களுடனான அவரது ஈடுபாடுகளை அதிகரிக்கச் செய்தன. இளைஞர்களின் விருப்பு வெறுப்புக்களை நன்கு அறிந்து அவர்களின் கவனத்தை ஈர்க்கும் செயற்பாடுகளில் கவனம் செலுத்துவதற்கான தூண்டுதல்களை வழங்கியிருந்தன. தமது உத்தியோகம் சார்ந்த அலுவல்களுக்கு மேலாகப் பல சமூக நிறுவனங்களில் இணைந்து கொண்டு சேவையாற்றுவதற்கான தலைமைத்துவப் பண்புகளை இவை உருவாக்கித் தந்தன.

சமூக சேவையில் குறிப்பிடத்தக்க வெற்றிகளைக் காண்பதற்கு உயர் மட்டத்திலான மனிதத் தொடர்புகளைப் பேணும் ஆற்றல் இவரிடம் நிறையவே இருந்தது. சிறியவர் முதல் வளர்ந்தோர் வரையிலுள்ள எல்லோரினதும் அன்பையும் ஆதரவையும் பெற்றவர். இத்தகைய தொடர்புகள் அவர் வாழும் பிரதேசத்துக்கு அப்பாலும் விரிவடைந்திருந்தது. கிராமசேவை அலுவலர் ஒருவருக்கு இருக்க வேண்டிய மென்திறன் தொடர்பாடலாக இருந்தாலும் வரதன் அவர்களுக்கு அதற்குள்ளும் நுண்மையான திறன்கள் இருக்கின்றன.

உதைபந்தாட்டத்தில் யாழ் மாவட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் மிகவும் பிரசித்தி பெற்றதொன்று. இக்கழகமானது பிராந்திய நிலையில் ஈட்டிவருகின்ற சாதனைகள் பல அத்துடன் தேசிய மட்டத்தில் புகழ் பெற்ற பலரையும் இக்கழகம் உருவாக்கியுள்ளது. இக்கழகத்தின் மேம்பாட்டில் வரதனுடைய பங்களிப்பும் அளப்பரியது. ஒரு காலத்தில் விளையாட்டுக் குழுவால் சிறந்த கோல் காப்பாளராகவும் பிரதிநிதித்துவம் செய்து கழகத்தின் வெற்றிக்கு உழைத்தவர். விளையாட்டுக்குழுவின் தொடர்ந்தும் இடம்பிடிக்காத போதும் புதிய விளையாட்டு வீரர்களைப் பயிற்றுவிக்கும் ஒருவராகவும், ஊக்குவிப்பை வழங்கும் ஒருவராகவும் விளையாட்டிலுள்ள பல்வேறு திட்டங்களைப் புதிய வீரர்களுக்கு எடுத்துரைக்கும் ஒருவராகவும் செயலாற்றி வருகின்றார்.

வரதன் அவர்கள் உதைபந்தாட்டத்தில் காட்டி வந்த பெருவிருப்பும் அர்ப்பணிப்பும் பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கம் உருவாவதற்கு வழிகோலியது. பல வருடங்கள் அச்சங்கத்தின் செயலாளராகவும் பணியாற்றி வந்துள்ளார். பின்னைய வருடங்களில் வடமராட்சி உதைபந்தாட்டச் சங்கச் உருவாவதற்கும் இவை வழிகோலின. இச்சங்கத்தினை உருவாக்கிய செயலாளர் என்ற பெருமையையும் ஈட்டியுள்ளார். வடமராட்சி உதைபந்தாட்டச் சங்கமானது இன்று இலங்கையில் மதிப்பு வாய்ந்த கழகமாகச் செயற்பட்டு வருகின்றதுடன் சிறந்ததொரு மத்தியஸ்தராகவும் செயற்பட்டு வருகின்றார்.

இவருடைய ஆளுமையின் இன்னொரு முகமாகச் சமூக சேவையில் காட்டி வருகின்ற ஆர்வத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடலாம். நாட்டிலே பிரச்சினைகள் மலிந்திருந்த காலத்தில் ஊரவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு வதிரி அபிவிருத்தி நிறுவனம் மேற்கொண்ட திட்டங்களில் தமது பங்களிப்பை வழங்கி வந்தார். கிராம உத்தியோகத்தருக்குரிய பணிகளுக்கு அப்பால் மனிதாபிமானத்துடன் செய்த உதவிகள் அளப்பரியன.

வரதன் அவர்கள் ஆன்மீக ஈடுபாடு கொண்டவர். வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய அபிவிருத்தித்திட்டங்களின் போது ஆலய வளவின் விரிவாக்கத்திற்கான காணிகளை மிக விருப்போடு வழங்கிய நன்கொடையாளன். இவரது குடும்பத்துப் பின்னணி இத்தகைய பணிகளுக்கு என்றும் ஆர்வங்காட்டி வந்தது. மேலும் ஏனைய சமூக மேம்பாட்டுத்திட்டங்களைத் தமிழ் மன்றத்தின் உதவியுடன் மேற்கொண்டு வருகின்றார்.

அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்யும் வரதராசன் அவர்களையும் அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் மருமக்களை வாழ்த்துவதில் மனம் மகிழ்கின்றோம்

பேராசிரியர் எம்.கருணாநிதி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. திரவியசிங்கம் வரதராசன்:
# நிலைமாற்றத் தலைமைத்துவப் பண்பு மிக்க ஒரு சமூக மனிதன்

ஒரு மனிதன் தனது பணிக்காலத்தில் ஆற்றிய சேவைகளுக்கும், தனது ஆளுமையை நிலை நாட்டிய விதத்திற்கும் பின்புலமாகப் பல விசைகள் அமைந்திருக்கும். அந்த விசைகள் அந்த மனிதனைப் புடம்போட்ட காரணிகளாக இருக்கின்ற அதேவேளை பிறமனிதர்களுக்கான படிப்பினைகளாகவும் அமைந்துவிடுகின்றன. இதனால் ஒரு குறிப்பிட்ட காலத்தின் சேவையை முடித்துக்கொண்டு அந்தச் சேவையிலிருந்து ஓய்வுபெறும் ஒருவரின் பணியை நயத்தல் என்பது தனிமனித, சமுதாய மற்றும் சமூகநிலைகளில் அவருக்கான இடத்தினை நிலைநாட்டுவதற்கான முயற்சியாகின்றது. இந்நிலையில், வெறுமனே ஒரு அரச பணியாளராக இருந்து பணிக்காலத்தினைக் கழித்துவிட்டுச் செல்லும் ஒருவருக்கும், சமுதாய நலன் நோக்கோடு சமூக மனிதனாக வாழ்ந்து தன் பணிக்காலத்தினை நிறைவு செய்து செல்லும் மனிதனுக்குமிடையே பணியை நயத்தலில் வேறுபாடு உண்டென்பதையும் உணரவேண்டும். இந்தவகையில் திரு. திரவியசிங்கம் வரதராசன் அவர்கள் தனது கிராம சேவகர் எனும் அரச பணியின் உன்னத நோக்கினை உணர்ந்து சேவையாற்றியதோடு, சமுதாய முன்னேற்றத்துக்கான பயன்மிக்க பல சேவைகளையும் ஆற்றியுள்ளார். மிகவுயர்ந்த தலைமைத்துவப் பண்புகளும் சமூகப் பொறியியலுக்கான படைப்பாக்கத் திறன்களும்(creativity for social engineering) கொண்ட ஒருவராக இவர் எவ்வாறு வடிவமைக்கப்பட்டார் என்பதை விளங்கிக்கொள்வதன்வழி பயனுள்ள பல செய்திகளை சமுதாயத்தின் இளவயதினருக்கு வழங்க முடியும்.

கல்வியும் கல்விக்கான சூழலும், வாண்மையும் அதற்கான பயிற்சிகளும், ஆர்வத்துறைகளும் அதனை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புக்களும் ஒரு மனிதனது ஆளுமை உருவாக்கத்திற்கும் அவனது சமூகப்பணி நோக்கிற்கும் அடிப்படைகளாகின்றன. இவ் அடிப்படைகளைச் சரிவரப் பயன்படுத்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர்கள் தங்களைப் பணிக்களங்களிலும் சமுதாயத்திலும் நிலைநிறுத்திக்கொள்கின்றனர். திரு திரவியசிங்கம் வரதராசன் அவர்களின் பன்முக ஆளுமைக்கும் சமுதாயப் பணிநோக்கிலான செயலாற்றலுக்கும் இத்தகைய அடிப்படைகள் காரணமாயின. இவற்றினை சற்று விரிவாக நோக்குவது பயன்மிக்கதாகும்.

திரு திரவியசிங்கம் வரதராசன்(இதன் பின் தி.வ. எனக்குறிக்கப்படும்) அவர்கள் கல்விகற்ற பாடசாலைகள் மூன்றும் வரலாற்றுப் பின்புலத்தினாலும் கல்விப் பாரம்பரியத்தினாலும் கல்வி நிர்வாகத்திற்கான தலைமைத்துவம்மிக்க அதிபர்களின் பணிகளினாலும் நன்கறியப்பட்ட முதன்மையான கல்லூரிகளாகும். உயர்தர வகுப்புவரை கல்வி கற்றிருந்த இவர் தனது ஆரம்பக் கல்வி தொடக்கம் எட்டாம் வகுப்பு வரையான கல்வியை யா/தேவரையாளி இந்துக் கல்லூரியிலும் ஒன்பதாம் பத்தாம் வகுப்புக்களை யா/மஹாஜனக் கல்லூரியிலும் க.பொ.த உயர்தரத்தினை யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும் கற்றிருந்தார். தேவரையாளி இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர் எம்.எஸ். சீனித்தம்பி காலத்தில் கற்ற இவர் உணரமுடியாத வயதிலேயே அதிபர் அவர்களின் தலைமைத்துவ ஆளுகைக்கு ஆட்பட்டிருந்தார். சிறுபராயத்திலேயே எம்.எஸ்.எஸ். அவர்களின் தலைமைத்துவ ஆற்றல்களைப் “புல்லுக்குமாங்கே பொசியும்” வகையில் பெற்றுக்கொண்ட பல மாணவர்களில் இவரும் ஒருவர். அர்ப்பணிப்பு, ஒழுக்கம், நேரமுகாமைத்துவம் என்பவற்றிற்கு இலக்கணமாக திகழ்ந்த ஆசிரியர்களான திரு.ஆர்.ஏஸ் மாஸ்டர், திரு.இ.செல்லத்துரை முதலியவர்களிடத்தில் கற்றிருந்தார். இவரின் கல்விக்கான வளம்மிக்க நாற்றுமேடையாக தேவரையாளி இந்து அமைந்தமை பின்னாளில் தி.வ. அவர்களின் ஆளுமையில் வெளித்தெரிந்தது. தெல்லிப்பழை மஹாஜனக் கல்லூரி தெ.அ.துரையப்பாபிள்ளை, இராஜரட்ணம் முதலிய அதிபர்களால் புடமிடப்பட்ட புகழ்பெற்ற கல்லூரி. கல்வி, கலை, விளையாட்டுத்துறைகளில் சாதனைகள் படைத்த கல்லூரி. அங்கு தமிழாசிரியர் திரு.அ.பொ.முருகையா (SLFP அமைப்பாளர்), விளையாட்டுத்துறை ஆசிரியர்(POG) திரு.T.P பத்மநாதன், திரு.ஆறுமுகம் முதலியவர்களிடம் கற்றிருந்தார். தி.வ. அவர்களின் மொழியாற்றல் மற்றும் விளையாட்டுத்துறை ஆர்வங்களை மஹாஜனக் கல்லூரி மேலும் புடமிட்டிருந்தது. மஹாஜன கல்லூரியின் உதைபந்தாட்ட அணியில் 3rd eleven மற்றும் 2nd eleven இல் விளையாடியிருந்தார். அக்ககாலத்தில் புகழ்பெற்ற பாடசாலையாகவிருந்த யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் உயர்தர வகுப்பில் பயின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களில் விளையாட்டின் மீதான தனது ஈடுபாட்டினை மேலும் வளர்த்துக்கொண்டார். அங்கு 1st eleven இல் அணியில் விளையாடியிருந்தார். இந்தக் கல்லூரிகள் பெற்றுத்தந்த அனுபவங்கள் நிச்சயமாக தி.வ. அவர்களிடத்தில் நிர்வாகத் திறனையும்(administrative capacity) ஒழுங்மைத்தல் திறனையும்(organizing capacity) வளர்த்திருக்க முடியும். இதுவே பின்னாளில் இவரை ஒரு நிர்வாக கிராம அலுவலராக ஆக்கியிருந்தமைக்கு அடிப்படையெனக் கருதலாம். அத்துடன் இவரது ஆர்வத்துக்குரிய விளையாட்டுத் துறைக்கான பாடசாலைக்கால அங்கீகாரமும் அந்த மூன்று கல்லூரிகளிலும் கிடைத்திருந்தது.

தொழில் ரீதியாக இவர் முதலில் விசேட சேவை உத்தியோகத்தராக(SSO-Special Service Officer) நியமனம் பெற்றுக்கொண்டார். இந்த நியமனமே இவரின் சமூகசேவை மற்றும் சமுதாய மேம்பாட்டுக் கான பணிகளிலான ஆர்வத்தினைத் தூண்டியது. பின்னாளில் கிராம சேவகராகப் பதவிமாற்றம் பெற்றபின்னர் சமுதாய மேம்பாட்டுக்கான பல்வேறு பணிசார்ந்த, பணிக்கு அப்பாலான செயற்பாடு களிலும் ஈடுபட்டுவந்த தி.வ. அவர்கள் தனது தொழிலுக்கும் ஆர்வத்துறைத்துமான சமநிலைத் தன்மை யான இடத்தினை வழங்கியிருந்தார். இவை இரண்டும் ஒன்று இன்னொன்றுக்குத் துணையாகி இவரின் தலைமைத்துவப் பாணியை ஒரு கவர்ச்சிகரமான தலைமைத்துவத்துக்குரியதாக ஆக்கியது. ஒரு புறத்தில் கிராம சேவகர்பணி மறு புறத்தில் விளையாட்டுத்துறை. இரு தடங்களிலும் அழுத்தமாகச் சுவடுகளைப் பதித்து நடந்த ஒருவராகவே தி.வ. அவர்கள் விளங்கினார். இந்த இரு துறைகளிலும் மிகுந்த பயிற்சிகளைச் சமகாலத்தில் பெற்று தனது தனித்துவத்தினையும் தனி அடையாளத்தினையும் நிலைநாட்டியிருந்தார். இந்தத் தனியடையாளத்திற்கான அடித்தளமாக வதிரி தமிழ்மன்றம் அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

வதிரி தமிழ்மன்றம் என்ற பண்ணையின்வழி சமூகசேவை, இலக்கியம், கலை, விளையாட்டு முதலிய துறைகளில் வெளிவந்தவர்கள் பலர். தமிழ் மன்றத்தில் மிகநீண்ட காலமாக தலைவர், செயலாளர் பதவிகளில் இருந்துவந்து, குறிப்பிடத்தக்க பணிகளை வதிரிக் கிராமத்திற்கு ஆற்றிவந்த கிளாக்கர் சி.க.இராசேந்திரன் அவர்களை தலைச்சனாகக்கொண்டு அவர் வழித்தடத்தில் நடந்த அக்காலத்து இளைஞர்களில் தி.வ. அவர்கள் முக்கியமானவர். உயிர்ப்புமிக்க இளைஞர்களை உருவாக்குவதன் வழியே உறுதியான கிராம சமுதாய மேம்பாட்டினை முன்னெடுக்கலாம் என்ற உண்மையை நடைமுறையில் காட்டிய தருணத்தில் தமிழ்மன்றத்தின் ஒரு வெளிப்பேறாக தி.வ. அவர்கள் விளங்கினார். தமிழ்மன்றம் பல்வேறு துறைகளில் இளைஞர்களுக்கு வழிகாட்டிக்கொண்டிருந்த அந்தத் தருணத்தில் திரு செ.சிவபால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கம் அவர்களின் பெருமுயற்சியினால் அப்போது இளைஞர் சேவை உத்தியோகத்தராகவிருந்த விமலேஸ்வரி என்பவரின் துணையுடன் தமிழ்மன்றத்தில் இளைஞர் கழகம் ஆரம்பிக்கப்பட்டது அந்த இளைஞர் கழகத்தின் அங்கத்தவராகவும் பின்னர் தலைவராகவும் தி.வ. அவர்கள் இருந்தவேளையில் வதிரிக்கிராமத்தின் இளைஞர்களுக்கான பயிலரங்குகளையும் செயலமர்வுகளையும் அறவழிப் போராட்டக் குழுவுடன் இணைந்து நடத்தியிருந்தனர். கண்டி, நுவரெலிய, மஹரகம போன்ற இடங்களில் இளைஞர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன. இந்தப் பயிற்சிகளின்போது இளைஞர் சேவை அமைச்சினால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் பின்னாளில் பட்டப்படிப்பை முடித்த இளைஞர் யுவதிகளின் வேலை வாய்ப்புக்கான மேலதிக தகைமையாகாக்கூட கருதப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இளைஞர் கழகமும் அதன் வழியான செயற்பாடுகளும் சமுதாயமட்டச் செயற்றிட்டங்களில் இளைஞர் யவதிகளின் பங்கேற்றலை அதிகரிப்பதற்கான அனுபவ முதிர்ச்சியைத் தி.வ. அவர்களிடத்தில் ஏற்படுத்தியது. இது சமுதாய மேம்பாட்டில் இளையோரின் பங்கேற்பு(youth participation in community development) என இன்று வலுவாகப் பேசப்படும் கொள்கைகள் தொடர்பாக தி.வ. போன்றவர்களின் தெளிந்த நோக்கினைக் காட்டுகின்றது. இந்த தொடர்ச்சியினை இன்றைய நாட்களில் விளையாட்டுத்துறையுடன் இணைந்த வகையில் மாத்திரம் முன்னெடுக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இது முன்னரைப்போல இளைஞரின் உத்தியோக வாய்ப்பு, சுயதொழில் முயற்சிகள் என்பவற்றுடன் ஒருங்கிணைப்பதிலான கிராமமட்டத் திலான தடைகளை ஆராய்ந்து பொருத்தமான வழிமுறைகளை வகுப்பவர்களாக தி.வ. போன்றவர் களையே மீண்டும் அடையாளப்படுத்துகின்றது.

தி.வ. அவர்கள் கிராம சேவகராகப் பணியாற்றிக்கொண்டிருக்கும் அதேவேளை, "விளையாட்டின் வழியான சமுதாய மேம்பாடு" எனும் எண்ணக்கருவுக்கு அதிக முக்கியத்துவத்தினை வழங்கியிருந்தார். இது அவ்வப்போது அவர்மீதானதும் அவர் போன்றவர்களின் மீதானதுமான விமர்சனங்களையும் உருவாக்கியது. உண்மையில் இளையோரை சமுதாய மேம்பாட்டுப் பணிகளில் அணிதிரட்டுவதற்கான வலுமிக்க துறையாக விளையாட்டு அமைகின்றது என்பது சமுதாய மேம்பாட்டுச் சிந்தனையாளர்களின் கருத்து. தி.வ. அவர்கள் "விளையாட்டு இளைஞர்களிடத்தில் துர்ப்பழக்கங்களை களைகிறது. அவர்களை ஏதோ ஒன்றினுள் உட்படுத்தி(occupy) வைக்கின்றது. நல்ல சிந்தனைகளை வளர்க்கிறது. சமுதாயப் பற்றினையும் ஈடுபாட்டினையும் அதிகரிக்கிறது. ஒரு பல்பரிமாண ஆற்றலைக் கொடுக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றோடு இளைஞர்கள் தங்கள் தொழில், சமூகத் தொடர்புகள் என்பவற்றை உறுதியாக உருவாக்கும் வலைப் பின்னலை உருவாக்கும்" என்று குறிப்பிடுகின்றார். இது இவர் விளையாட்டினை ஒரு சமூக மூலதனமாக(social capital) கருதுகின்ற மனப்போக்கினையே குறிக்கின்றது. சமுதாய மேம்பாட்டுக்கான தனது பணிகளுக்கான பயிற்சிகள் பலவற்றைப் பெற்றிருந்த இவர், விளையாட்டுத்துறையில் குறிப்பாக உதைபந்தாட்டத்துறையில் தான் பெற்றுக்கொண்ட பயிற்சிகள் வாயிலாக பின்னாளில் பல உதை பந்தாட்டப் பயிற்றுவிப்பாளர்கள், மத்தியஸ்தர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள், விளையாட்டுத் துறை ஆசிரியர்கள் தங்கள் விளையாட்டுத்துறை ஆர்வத்தினை சமூக மூலதனமாக ஆக்கிக்கொள்ள சந்தர்ப்பங்களை உருவாக்கிக்கொடுத்தார். 1981 ஆம் ஆண்டில் சமுதாய அபிவிருத்தி தொடர்பாகவும், 1989 ஆம் வருடத்தில் செயற்றிட்ட உருவாக்கம் தொடர்பாகவும் இலங்கை மன்றக் கல்லூரியில்(SLFI) வாண்மைசார்ந்த பயிற்சிகளைப் சமூகச் செயற்பாட்டாளர்களிடமும் புலமைசார் பேராசிரியர்களிடமும் பெற்றிருந்தார். சர்வதேச உதைபந்தாட் சம்மேளனத்தின் (FIFA) Olympic Solidarity Coaching பயிற்சி ஒன்றினையும் ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் Football Management and Administration பயிற்சியினை இலங்கையிலும் மற்றும் மலேஷியாவிலும் (2009, 2012 ஆம் ஆண்டுகளில்) பெற்றுக்கொண்டதோடு முதன்முதலாக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த Burkhard Pape என்ற பயிற்சியாளரால் நடத்தப்பட்ட பயிற்சியிலும் கலந்துகொண்டார். இவை தி.வ. அவர்களை விளையாட்டுத்துறை ஆர்வம் மிக்க ஓர் இளைஞர் படைக்கு வழிகாட்டும் வகைமையுடையவராக்கியது. இதற்கான களங்களாக சொந்த ஊரைச்சேர்ந்த இளைஞர்களைக் கருத்திலெடுத்தால் டயமண்ட்ஸ் விளையாட்டுக் கழகமும், பிரதேசத்தினைக் கருத்திலெடுத்தால் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் (PPFL) மற்றும் வடமராட்சி உதைபந்தாட்ட லீக்(VFL) என்பவற்றுக்கு உட்பட்ட இளைஞர்களைக் கொண்ட விளையாட்டுக் கழகங்களும் அமைந்தன.

1994 ஆம் வருடம் முதல் தொடர்ச்சியாக இருபது வருடங்கள் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் செயலாளராகவிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டில் வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் ஸ்தாபகச் செயலாளராகவும் இருந்தார். பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் நெடிய வரலாற்றில் தி.வ. அவர்களுக்கு முன்னரும் சமகாலத்திலும் பல முக்கியஸ்தர்கள் இருந்தனர். V.K.ஆறுமுகம், சி.க.இராசேந்திரன், செல்வராசா(முழுமையான பட்டியல் அல்ல) முதலானவர்கள் பலர் கையளித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமைகளின் தொடர்ச்சியில் தி.வ. அவர்களும் அவரோடு இணைந்த பலரும் முதன்மையானவர்கள். அவர்களோடு தனது விளையாட்டுத்துறைக்கான ஆகர்ஷியர்களாகவும் சகபயணிகளாகவும் திரு A.R.சிவகுரு, யாழ்ப்பாணம் டாக்டர் பிலிப், S.T.குணநாதன், இ.குமரையா, வயாவிளான் N.பத்மநாதன், D.M.வேதாபரணம் முதலியோரைக் குறிப்பிடுகின்றார். இவர்கள் யாவரினுள்ளும் உதைபந்தாட்டத்தில் முதன்மை வழிகாட்டியாக அமரர் இரத்தனசிங்கம் அவர்களே அமைந்தாரென பெருமையுடன் குறிப்பிடுகின்றார். தி.வ. அவர்களின் காலத்தில் 2010 ஆம் ஆண்டில் சிரேஷ்ட லீக் சாம்பியன் சுற்றுப்போட்டியில் முதன்முதலாக தமிழ்ப்பிரதேசத்தினைச் சேர்ந்த பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் வெற்றி பெற்றமை இன்றும் வரலாற்றுச் சாதனையாகப் பேசப்படுமளவிற்கு தி.வ. அவர்களின் பங்கு அமைந்திருந்தது. தனது சொந்த ஊரைச்சேர்ந்த கழகம் என்றவகையில் டயமண்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தினை 2010 ஆம் வருடம் தேசிய சுற்றுப் போட்டியில் வெற்றிபெறச் செய்தமையும் இவரது சாதனையே. இதன் தொடர்ச்சியாகவே பிறிமியர் லீக் சுற்றுப்போட்டியில் இன்று யங்கம்பன்ஸ், பொம்மர்ஸ், நவஜீவன் போன்ற விளையாட்டுக் கழகங்களும் வெற்றிபெற்றுச் சாதனை படைத்துள்ளன. லீக்கின் வழி கழகங்களை ஒருங்கிணைத்தல், மத்தியஸ்தர் பயிற்சிகளை வழங்கல், வீரர்களை அணிதிரட்டலும் பயிற்றுவித்தலும், கழக முகாமைத்துவப் பயிற்சிகள் வழங்குதல், வீரர்களுக்கான அடுத்தடுத்தமட்ட தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற தலைமைத்துவ ஆற்றல்களால் விளையாட்டுத்துறையின் அதிகளவிலான பயன்களைப் பிரதேசத்திற்காக்கினார். திரு கி.தர்மேந்திரா, திரு வி. சாரங்கன், திரு இ.அனுராகாந்தன், திரு பா.முகுந்தன், திரு அ.வசந்தன், திரு. திருமாறன் போன்றோர் அனுமதிப் பத்திரம் பெற்ற பயிற்றுனர்களாக உருவானமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். அவ்வாறே டயமண்டஸ் அணி வீரர் திரு க.பிரேம்குமார் தேசியரீதியில் உதைபந்தாட்ட அணியில் விளையாடியமை குறிப்பிடத்தக்கது.

கரவெட்டி பிரதேச செயலகமும் அதன் விளையாட்டுச் செயற்றிட்டங்களும் தி.வ. அவர்களின் பங்களிப்பினை எப்போதும் வேண்டி நின்றன. 1987 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டுவரை கரவெட்டி பிரதேச செயலகத்தில் விளையாட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்படாத நிலையில் தி.வ. அவர்கள் பிரதேச மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளை பொறுப்பேற்று நடத்திவந்தார். கிராம சேவகர் உத்தியோகமும் விளையாட்டுத்துறை ஆர்வமும் ஒருங்கே கலந்ததன் விளைவாக பிரதேச மட்டத்திலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு மேம்பாட்டுச் செயற்பாடுகளில் தவிர்த்துவிடமுடியாத ஒரு பாத்திரமானார். பன்முக ஆளுமையுள்ள மனிதன் ஒருவனுக்கு பணிக்களத்து அங்கீகாரம் அவனது உற்பத்தித்திறனை அதிகரிக்க வழிசமைக்கும் என்பதை இதன்மூலம் புரிந்துகொள்ளலாம்.


தமிழ் மன்றம், டயமண்ட்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் வட்டுவத்தை சனசமுக நிலையம் என்பவற்றின் பன்முகப் பணிகளில் தி.வ. அவர்களின் பங்கு முக்கியமானது. தமிழ்மன்றத்தினால் வெளியிடப்பட்டுவந்த "மன்றம்" கையெழுத்து சஞ்சிகையினை அச்சுப்பதிப்பாக்கம் செய்வித்து வெளியிட்ட முயற்சியில் இவரின் பங்கும் முதன்மையானது. ஆரம்பத்தில் சிறியளவில் இலக்கிய ஈடுபாடு கொண்டிருந்தாலும் பின்னர் அதனை மேவி விளையாட்டுத்துறை ஆர்வம் மிகுந்திருந்தது. ஆனால், இவரது சமுதாயப் பணி சார்ந்த நாட்டத்தில் குறைவு ஏற்படவில்லை. தமிழ் மன்றத்தில் மாத்திரமன்றி அதிபர் எம்.எஸ்.சீனித்தம்பி அவர்களால் தாபிக்கப்பட்ட வதிரி அபிவிருத்தி நிறுவனத்திற்கு அதிபரின் மறைவுக்குப் பின்னர் தலைவராகவும், அவர் பெயரிலான நிதியத்திற்குச் செயலாளராகவும் விளங்கினார். நலிவுற்ற மாணவர்களின் கல்வி விருத்தி, பெண்களின் சுயதொழில் ஊக்குவிப்பு, சுய உதவிக் குழுக்களின் உருவாக்கம், நூலக சேவை முதலிய பல்வகைப் பணிகளை ஆற்றிய வதிரி அபிவிருத்தி நிறுவனத்தின் பணியில் இணைந்திருந்தமை தி.வ. அவர்களின் "நலிந்தோர் சார்ந்த மேம்பாட்டு" முன்னெடுப்புக்களிலான ஆர்வத்தினைக் காட்டுகின்றது. இதன் தொடர்ச்சியாகத்தான் இன்று தனது பணிகள் அனைத்துக்கும் உறுதுணையாகவிருக்கும் மனைவி திருமதி சிவதேவி அவர்களின் பாசத்துக்குரிய பெரிய தந்தையார் அமரர் பத்மநாதன் அவர்களின் பெயரால் K.P Foundation என்ற நிறுவனத்தினை தாபித்து தனது பிள்ளை களான திரு மனோராஜ் திரு சிவராஜ், திரு பத்மஸ்ரீ ஆகியவர்களின் துணையுடன் சொந்தப் பணச்சேமிப்பில் சிறியளவி லான தேவையுடைய நலிந்தோருக்கான சேவைகளை ஆற்றிவருகின்றார். இதில் 50 வீதமான உதவி கல்விக்கானது. அரச பணி சார்பிலும் பொது நிறுவனங்கள் சார்பிலும் சமுதாய நோக்கில் செயற்பட்டுவந்த தி.வ. அவர்கள் குடும்ப நிலையில் நின்றும் செயற்பட முனைவது கிராமிய சமுதாய மேம்பாட்டிற்கான அவரின் செயலாற்றல்களை பருநிலையிலும் நுண்ணிலையிலும் நோக்க வழிகாட்டுகின்றது.

இவ்வாறு, இன்று தலைமைத்துவம் தொடர்பாக வலியுறுத்தப்படும் கருத்துக்களில் ஒன்றான "நிலைமாற்றத் தலைமைத்துவம்" என்ற எண்ணக்கருவுக்கு அமைவாக நம்பிக்கைக்குரிய இலட்சிய நாட்டமுள்ள செல்வாக்கினை(idealized influence) ஏற்படுத்தி, தமிழ்மன்றம், டயமண்ட்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுக்கழகம் உதைபந்தாட்டம் ஆகிய அடையாளங்களின் வழியேயான வசீகரம் மிக்க உந்தலை(inspirational motivation) பிறரிடத்தில் ஏற்படுத்தி, பயிற்சியளித்தல், விளையாட்டு முகாமைத்துவம் தொடர்பான அறிவூட்டுதல் என்பவற்றின்வழி துறைசார்ந்த விடயங்களைக் கற்றுக்கொள்வதற்கான பண்பாட்டினை உருவாக்கவல்ல புலமைத்தூண்டலை(intellectual stimulation) ஏற்படுத்தி, வழிகாட்டிகள், சகபாடிகள், பின்தொடரும் விளையாட்டுக் கழகங்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் என்போருடனான உறவினை விருத்திசெய்யும் வகையிலான தனியாள் கவனிப்பை(individual consideration) ஏற்படுத்தி ஒரு ஜனரஞ்சகமான தலைவராக விளங்கிவந்தார். "உன்னுடைய செயல்கள் பிறரை அதிகம் கனவுகாண வைப்பதற்கும், அதிகம் கற்றுக்கொள்ள வைப்பதற்கும், அதிகம் கருமமாற்ற வைப்பதற்கும், அதிகம் முன் நகர வைப்பதற்கும் வசீகரிக்குமானால் நீ தலைவனாகின்றாய்" என ஜோன் குவின்சி அடம்ஸ் கூறும் தலைமைத்துவ இலக்கணத்திற்கு அமைவாக தி.வ. அவர்கள் விளங்கிவந்துள்ளார்.

இ.இராஜேஸ்கண்ணன்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாய அபிவிருத்திச் செயலாற்றுகையின் பங்காளன்

சமுதாயத்தின் தகுதி உயர்ந்த ஒழுக்கத்தில் இருந்தே பார்க்கப்படும். சமுதாயத்தின் தாக்கம் மனிதனிலும், மனிதனின் தாக்கம் சமுதாயத்திலும் இருந்து கொண்டே இருக்கும். சமுதாயத்தைப் பிரதிபலிப்பது அதன் அபிவிருத்தி. சமுதாய எழுச்சியையும், சீர்திருத்தங்களையும் அபிவிருத்திக்கு ஊடாகக்கண்டுகொள்ள முடியும். சமுதாய குறைபாடுகளைச் சரிப்படுத்த உதவுவதே உண்மையான அபிவிருத்தி என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

எமது ஊர் முன்னோர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலேயே தீர்க்க தரிசனமாகச் சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனைகளை மக்கள் மத்தியில் போதுமான அளவு விதைத்திருந்தனர். அச்சிந்தனைகள் மேல் ஈர்ப்பினை ஏற்படுத்தவும் அவர்கள் தவறிவிடவில்லை. சமத்துவமான சமுதாயக் கட்டமைப்பில் நாட்டம் கொண்டிருந்தனர். சமூக வேறுபாடுகளை எதிர்த்ததோடு ஊர் மக்களையும் விழிப்படையச் செய்து எழுச்சி பெறவும் செய்தனர்.

முன்னோரின் வாழ்க்கை முறையில் பிரதானமான வேட்கையாக அமைந்தது நின்றது மக்கள் சேவை. மக்கள் சேவை என்ற வகையில் பல்வேறு பொதுப்பணிகளைச் செயலாற்றி ஊர் மக்களைத் தென்னிலங்கை வரை முன்னிலைப்படுத்தினர். சம்பிரதாயங்களோடு மட்டுமில்லாமல் சமுதாய அபிவிருத்திச் செயலாற்றுகை பங்காளர்களாக்கி மக்கள் சேவை என்ற உயர்ந்த குறிக்கோளை விடாப் பிடியாகப் பற்றிக்கொண்டு வாழ்ந்து காட்டி மனித வாழ்வியலுக்கு இலக்கணமும் வகுத்துத்தந்துள்ளனர்.

மிக நெருக்கடியான காலகட்டத்தில் வாழ்வியலுக்குத் தேவையானவையாக இருந்த சகல துறைகளிலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர்களும் இவர்களே. மறுக்கப்பட்ட சமய கலாசாரத்தில், கல்விப்போக்கில், கலையில், அரசியலில், இலக்கியத்திலுங்கூட விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் தான். இவ் வரலாற்றுச் செய்திகளுக்கு தேவரையாளி இந்துக்கல்லூரி, பூவற்கரைப் பிள்ளையார் ஆலயம், பாதணி உற்பத்தித் தொழிற்சாலை, வதிரி தமிழ் மன்றம் இன்னும் சான்று பகர்ந்து கொண்டிருக்கின்றன இவற்றின் ஊடாக சமுதாய அபிவிருத்தியின் சிறப்பை முன்னோர்கள் எமக்குப் புரிய வைத்தனர்.

காலத்தோடு இயைந்து கடமைகளைச் செய்து எம்மை இன்று தலை நிமிர்ந்து நிற்கச் செய்த அவர்களை நினைவுகூர்ந்து பெருமிதம் கொள்வோம்.

இன்றைய மனிதர் வாழும் இடங்களும், வாழ்க்கைமுறைகளும் விஞ்ஞானத்தின் வேகத்தால், தொழில் நுணுக்க வளர்ச்சியால் திசைமாறிச் சென்று கொண்டிருக்கின்றன. இளந்தலைமுறையினருக்கும், பழந்தலைமுறையினருக்கும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதனால் குழப்பம் ஏற்பட்டு மனித வாழ்க்கை சிக்கல் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. தேய்ந்து கொண்டு வரும் கல்வி மேலுள்ள நாட்டத்தையும், பக்தி உணர்வையும், கலாசார சீர்கேடுகளையும் சீராக்க வேண்டிய நிலை தற்பொழுது தோன்றியுள்ளது. வீழ்ச்சிப் பாதையில் செல்லும் போக்கில் வேகம் பயமுறுத்துவதாகவுள்ளது.

சமுதாய அபிவிருத்திப் பணி எந்த வயதிலும் செய்யக்கூடியது. என்பதை எல்லோரும் அறிந்திருத்தல் வேண்டும். ஆனால் எல்லோராலும் அதைச் சிறப்பாகச் செய்யலாம் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதையும் ஏற்றுக்கொண்டு தான் ஆக வேண்டும். வாழுந்தலைமுறையினருக்கும், இனி வரும் தலைமுறையினருக்கும் எதிர்காலத்தில் நட்பு மிகுந்த ஒரு புரிதலை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள விஞ்ஞான அறிவோ, தொழில்நுணுக்க அறிவோ தேவைப்படாது.

இவ்வாறான ஒரு நெருக்குவாரம் நிறைந்த கால கட்டத்தில் எமக்கு சமுதாய அபிவிருத்திச் செயலாற்றுகைப் பங்காளன் ஒருவன் தேவைப்படுகின்றான் என்பதை நாம் உணர்ந்து கொள்ளாவிட்டால் அது, எமது புத்திக்கூர்மையை இழிவு படுத்திவிடும். அப்பங்காளன் திரு.திரவியசிங்கம் வரதராஜன் (வரதன்) தான் என்பதை ஏற்போமாயின் அது, எமது பாண்டியத்தைப் புலப்படுத்தி நிற்கும். வரதனின் அறிவு, திறன், மனப்பாங்கு அதி உத்தம மட்டத்திலும் இருப்பதை கீழே சுருக்கக் குறிப்பு தெரிவிக்கும்.

விசேட சேவை உத்தியோகத்தர் (1982 - 1988), கிராம அலுவலர் (1989 - 2014), நிர்வாகக் கிராம அலுவலர் (2015 - 2016), வதிரி தமிழ் மன்றம் - தலைவர் (1979 - 2016), உதைபந்தாட்ட லீக் - செயலாளர் (1986 - இன்றுவரை), வட.தெற்குமேற்கு ச.ச.நி சமாசம் - செயலாளர் (1979 -1980), யாழ்.மாவட்ட கிராம அலுவலர் சங்கம் - தலைவர் (2014 - 2016), வதிரி அபிவிருத்தி நிறுவனம் - செயலாளர், அதிபர் சீனித்தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதியம் - செயலாளர் (2010 - இன்றுவரை), KP பவுண்டேசன் - நிபுணத்துவ ஆலோசகர் (2012-இன்றுவரை), தேவரையாளி இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - செயலாளர் (2010), தோற்பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் - செயலாளர், தோற்பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் - தலைவர் (2016-இன்றுவரை)

வரதனின் அனுபவம் தொடர்ந்தும் சமுதாய அபிவிருத்திச் செயலாற்றுகையை இலக்குடையதாக மாற்றம் பெற்றால் எமக்குக்கிடைக்க இருக்கும் வரப்பிரசாதங்களில் அதையும் ஒன்றாக கருத முடியும். பொதுப் பணிகளில் தன்னை ஏலவே ஈடுபடுத்திக்கொண்ட வரதன் முற்போக்குச் சிந்தனைகள விதைத்துச் சமதர்மக்கொள்ளைகளில் நாட்டங்களொள்ளச் செய்த முன்னோரின் பட்டியலில் இடம்பிடிக்க வேண்டும் என்பதே என் அவா. சமுதாய அபிவிருத்திப் பணிகளில் தன்னைத்தொடர்ந்தும் ஈடுபடுத்தினால் அது கைகூடுவது இயலாத ஒன்றல்ல. அதற்குரிய இயலுமையும், தலைமைத்துவப் பண்பும் இவரிடம் நிறையவே உண்டு.

வரதன் சமுதாய அபிவிருத்திச் செயலாற்றுகையின் சான்றாக விளங்குவார் என்பதில் ஐயமில்லை. இவர் பணி சிறப்பாக அமைந்து மக்கள் நலம் பெற வேண்டும். இவர் போல் இன்னும் பலர் முன்வரின் நலன் தரும்.

என் இனிய வாழ்த்துக்கள்

பண்டுதொட் டாற்றும் பொதுப்பணிப் பங்காளா
தொண்டு நிறைசெய் திசைபோய் நீ - மண்ணுலகில்
முன்மாந்தர் தொட்ட பணி மும்மடங்காய் நீண்டகல
மென்மேலு மாற்றுவாய் பணி

சீ.சாந்தநாதன்
ஓய்வு நிலை ஆசிரியர்
தலைவர், அதிபர் சீனித்தம்பி நிதியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரதராசனின் சமுதாய நோக்கிலான ஆன்மீகம்

சைவமும் தமிழும் செழித்தோங்கும் எமது வதிரிக்கிராமத்தில் சைவ பாரம்பரியங்களை பேணிக் கடைப்பிடித்து வரும் குடும்பங்களில் பள்ளந்தோட்டமும் ஒன்றாகும் என்பதை யாரும் மறுக்க முடியாது. இத்தகைதொரு உயர்ந்த பாரம்பரியத்திற்கு வித்திட்டவர் பெரியவர் என எல்லோராலும் போற்றப்படும் அமரர் க.மூ.சின்னத்தம்பி என்பவர் ஆவார்.

ஆன்மாக்களை பக்குவப்படுத்துவது சமயமாகும். சமயம் சமுதாயத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. சமுதாயத்தில் தனிமனிதனின் வாழ்க்கை நெறியே சமயம் என்று அழைக்கப்படுகிறது. குறிக்கோளின் அடிப்படையில் மக்களைப் பக்குவப்படுத்துகின்ற செயல் நிலையில் உயர்நிலை நோக்கி செலுத்துகிற சமய நிறுவனங்களாக திருக்கோயில்கள் அமைகின்றன.

ஆலயங்கள் அமைப்பு முறையில் கலைகளின் இருப்பிடமாகவும் விழாக்களால் மக்கள் வேறுபாடுகளை களையும் இடமாகவும் காணிக்கையால் பொருளாதாரத்தின் இருப்பிடமாகவும் திகழ்வதால் கோயில்கள் ஒரு சமூகத்தின் சார்பிடமாக திகழ்கின்றன. அதனாலேயே "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது உலகநாதனின் கூற்றாகும். இதனை தீர்க்க தரிசனமாக அறிந்த எம்முன்னோர் அக்காலத்தில் ஒதியமரத்தின் கீழ் சிறு கொட்டிலை ஒரு ஆலயமாகஅமைக்க வேண்டும் என்று திடசங்கர்ப்பம் பூண்டார்கள்.

ஆலயத்திற்குரிய காணியை அமரர்களான க.மூ.சின்னத்தம்பி, சைவப்புலவர் சீ.வல்லிபுரம் இருவரும் தருமசாதனம் செய்துள்ளனர். அத்துடன் ஆலயத்தின் முகாமையார் பதவியை ஏற்றுக் கொண்ட அமரர் க.மூ.சின்னத்தம்பி அவர்களும் எமது கிராமத்தைச் சேர்ந்த சைவப் பெரியார்கள் பலரும் ஒன்றிணைந்து கிராமத்தின் மத்தியில் தூபியுடன் கூடிய அழகான ஒரு ஆலயத்தை கட்டியதுடன் 1959ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இவ்வாலயம் நமது முன்னோர்கள் எமக்களித்த அருள் செல்வமாகும். இவ் ஆலயம் படிப்படியாக எமது மக்களின் பொருளாதார பங்களிப்பினாலும் ஆலய பரிபாலன சபையினராலும் அபிவிருத்தி அடைந்து இன்று ஆகம விதிக்குட்பட்ட ஓர் ஆலயமாக திகழ்வது எமது கிராமத்திற்கு பெருமையாகும். கோயிலின் அடிப்படையாக வலியுறுத்தப்படும் விதி முறைகளும் கோயிலில் நிறைவேற்றப்படும் செயல் முறைகளும் குடிமக்களை தழுவிய கோயிலின் அடிப்படை ஆகின்றன. அவ்வகை முறைகளிலேயே முன்னோர்கள் முற்காலத்தில் ஆலயங்களை அமைத்ததுடன் ஆலயத்தின் வருமானத்திற்காக நிலங்களையும் மானியங்களாக தர்மசாதனம் செய்தனர். குளக்கோட்ட மன்னன் திருக்கோணேச்சர ஆலயத்தை அபிவிருத்தி செய்ததுடன் தனக்கு சொந்தமான வயல்களையும் நிலங்களையும் மானியமாக கொடுத்தான் என்பதை ஆலய வரலாற்றின் ஊடாக அறிகிறோம்.

"என்ன புண்ணியம் செய்தனே நெஞ்சமே" என்ற சம்பந்தரின் திருவாக்கின் படி அமரர் க.மூ.சீ அவர்கள் தான் மேற்கொண்ட இறைபணியை நிறை பணியாக செய்ததன் பயனாக அன்னாரது குடும்பத்தினர் சீரும் சிறப்பாக வாழ்ந்து வந்தார்கள். இந்நிலையில் அமரர் திரவியசிங்கம் அவர்களின் மகன் வரதராசன் என்பவர் அமரர் சிவராசலிங்கம் அவர்களின் மகள் சிவதேவி என்னும் மங்கையை திருமணம் புரிந்து இல்லறமே நல்லறமாக வாழ்ந்து வந்தார்கள்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்கை
பண்பும் பயனும் அது"

என்ற வள்ளுவன் வாக்கின் படி அறனும் ஒருங்கே இணைந்து வாழ்ந்து அதன் பயனை அடைந்தார்கள்.

எமது சொந்த ஆலயத்தில் எமது கிராம மக்களின் விடா முயற்சியால் ஒரு சித்திரத்தேர் உருவாக்கப்பட்டது. இச்சித்திரத்தேர் ஓடும் வீதி செப்பனிடப்பட வேண்டிய நிலையில் ஆலய நிர்வாகத்தினர் தம்பி வரதராஜனை அணுகியபோது மனம் உகந்து தனது காணியின் பெரும்பகுதியை அன்பளிப்பாக வழங்கினார். அத்துடன் ஆலயத்தில் நடைபெறும் வருடாந்த உற்சவங்களில் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கு தனக்கே உரித்தான நிலத்தில் அனுமதி வழங்கியதன் பயனாக ஆலயத்திற்கு வருடந்தோறும் ஒரு தொகைப்பயணம் வருமானமாக கிடைக்கின்றது.

ஆலயத்திருப்பணி தொடர்பாக 2015ம் ஆண்டு அழகான ஒரு தீர்த்தக்கேணி நிர்மாணிக்கப்பட்டது. எமது ஆலயம் குபேர திசையை நோக்கி இருப்பது ஒரு சிறப்பான அம்சமாகும். தீர்த்தக் கேணியை மேலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுபடுத்துவதற்காக அருகில் உள்ள ஆலயத்தின் நேர் முகவாயிலில் ஒரு நுழைவாயில் அமைக்க வேண்டும் என ஒரு சிந்தனை உருவானது. இக்காலகட்டத்தில் மீண்டும் திரு வரதராசானை அணுகியபோது அதற்குரிய நிலத்தையும் அன்பளிப்பாக வழங்கியமை அவர் விநாயகர் மீதுள்ள பக்தியின் வெளிப்பாடாகும்.

அவரின் புதல்வர்காளல் "பப்பா" என செல்லமாக அழைக்கப்பட்ட அவர்களது பேரன் அமரர் திரு கந்தவனம் பத்மநாதன் ஞாபகார்த்தமாக கே.பி. பவுண்டேசன்என்னும் ஒரு நிதியத்தை அமைத்து பல வழிகளில் எமது மக்களுக்க உதவி செய்து வருகிறார்கள். ஆலயத்தில் 10 நாட்களும் நடைபெறும் இறை அர்ப்பண நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் கரைலஞர்களுக்கு தீர்த்தோற்சவத்தில் அன்று பெறுமதியான பரிசில்கள் வழங்கி கௌரவித்து வருகிறார்கள். ஆன்மீகத்துடன் கலைகளையும் வளர்ப்பதற்கு எதிர்காலத்தில் இந்நிதியம் நிலைக்களனாக விளங்கும் என்பதில் ஐயம் இல்லை.

வளம் இருந்தால் மனம் இல்லை என்றும் மனம் இருந்தால் வளம் இல்லை என்றும் கூறுவார்கள். இவை இரண்டும் ஒருங்கே அமையப் பெற்றவர் தம்பி வரதராசன் ஆவார். தானம், தர்மம் என்பதில் தானம் என்பது ஒரு பயன்கருதி செய்வதாகும். தர்மம் என்பது பயன் கருதாது இறை அர்ப்பணமாக செய்வதாகும். இவ்வகையில் எமது ஆலயத்தின் அபிவிருத்திக்காக தனது நிலங்களை தர்மமாக அன்பளிப்புச் செய்த பெருந்தகையாளர் தி.வரதராசன்.

மணிவழா நாயகராக விளங்கும் அவர் தனது ஓய்வு காலத்தில் சமயப்பணியிலும் சமூகப்பணியிலும் தன்னை அர்ப்பணிப்பதுடன் அவரும் அவரது குடும்பத்தினரும் சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வ பெற்று பேரானந்தம் அடைய வேண்டும் என கலை நிறை கணபதியாய் வீற்றிருக்கும் பூவற்கரையானின் திருப்பாதங்களை இருகரம் கூப்பி இறைஞ்சுகிறேன்.

"சமூகம் வாழ்ந்தால் சமயம் வாழும்" - சுவாமி விவேகானந்தர்

**திரு.மா.பாலேந்திரம் - ஓய்வுநிலை ஆசிரியர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை உறவுக்கு நன்றியோடு ஒரு மடல்

சமகால உலகியல் மாற்றங்கள் மனித வாழ்க்கையில் பல்வேறு குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்திய வண்ணமே உள்ளன. அவற்றுள் குடும்ப அமைப்புக்களிலும் வாழ்க்கை முறைகளிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் குறிப்பிடத்தக்கவை.

ஆரம்பத்தில் கூட்டுக்குடும்ப முறைகளில்எம்மவர்கள் வாழ்ந்து வந்தனர். ஆனால் இன்று அந்த முறைகள் மாற்றம் அடைந்துள்ளன. கூட்டுக்குடும்பத்தை பாரிய சுமையாகக் கருதும் நிலையே காரணமாகும்

பாக்கியலட்சுமி பவனத்தைப்பொறுத்தவரையில் எமது பெற்றோர்களும் கூட்டுக் குடும்பமாகவே வாழ்ந்து வந்துள்ளனர். அவர்களை பின்பற்றி நானும் எனது சகோதரியும் ஒரு வீட்டிலேயே திருமணத்தின் பின்னரும் கூட வசித்து வருகின்றோம்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை எனது தந்தையாரான கு.சிவராஜலிங்கத்தின் வாழ்வை பறித்துவிட்டது. இவ்வாறான நெருக்கடியான நிலைமுதல் எமது குடும்பத்தை தலைமை தாங்கி சென்றுகொண்டிருப்பவர் எனது மைத்துனர் தி.வரதராசன்.

தந்தையை இழந்த நிலையில் எம் இருவரையும் தன்பிள்ளைகளாக கவனித்துக்கொண்டிருந்த எமது பெரிய தந்தை அமரர். க.பத்மநாதன் எமக்குத் எந்த குறையையும் விடவில்லை. எந்தவிதமான பாரபட்சமும் இன்றி அவர் எம்மை அரவணைத்துச் சென்றார். குடும்ப பொறுப்பினையும் அவரே சுமக்கின்ற நிலை ஏற்பட்டது.

இவ்வாறான நிலையில் அந்த சகல பொறுப்புக்கள் சுமைகளையும் தன் மீது உள்வாங்கி இன்றுவரை சுமந்து கொண்டு எனது கணவன் மு.ரகுநாதனையும் உற்ற சகோதரனாக ஏற்று அனைவருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டியாக இருப்பவர் எமது மைத்துனர்.

ஒரு புறம் உத்தியோகம் மறுபுறம் சமூக சேவையென வேலைப்பளுவுக்கு மத்தியிலும் குடும்ப பொறுப்புக்களிலிருந்து அவர் ஒரு போதும் விலகி நின்றதில்லை. எனது சகோதரி சிவதேவியை அவர் மணம் முடித்த ஒரு சில வருடங்களில் தந்தையை இழந்து நாம் தவித்தபோது இவ்வாறான ஒரு தலைமைத்துவம் எமக்கு கிடைத்திருக்காது விடில் இன்று இவ்வாறான ஒரு கட்டமைப்புடனான எமது குடும்பங்களை நாம் கண்டிருப்போமா என்பது சந்தேகமே.

இவ்வாறான ஒரு குடும்ப தலைவனை எமக்குத் தந்த அவரின் பெற்றோர்கள் திரவியசிங்கம் நவமணி தம்பதியினருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றிகளைக் கூற வேண்டியது அவசியம்.

கால மாற்றங்கள் காரணமாக நாம் பிரிட்டனில் குடியேற வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பினும் இன்றும் கூட எமது பிள்ளைகளை தன்பிள்ளைகளாகவே உரிமை கொண்டாடுவதுடன் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும் அதிக அக்கறையுடன் உள்ள ஒருவராக அவர் உள்ளார்.

இவ்வாறான ஒரு சிறந்த மனிதனை எம்முடன் இணைத்த பூவற்கரையானுக்கு முதற்கண் நன்றிகளைக் கூறி 60 ஆம் அகவையில் தடம் பதிக்கும் அவர் சீரும் சிறப்புடனும் வாழவும் தனது சேவையை தொடரவும் மீண்டும் பூவற்கரையானை வேண்டி இச்சிறு மடலை நிறைவு செய்கின்றேன்.

**திருமதி.ஜெயதேவி இரகுநாதன்**
**இலண்டன்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# தி.வரதராசனின் வழித் தடங்கள் ...






PREMIER LEAGUE TOURNAMENT 2010



VATHIRY DIMAONDS.S.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# தி.வரதராசனின் வழித் தடங்கள் ...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளியீடு

தி.வரதராசன் பணிநயப்பு விழா

ஒழுங்கமைப்புக் குழு

ஜனவரி 2017

பரணி பிறிண்டர்ஸ்
நெல்லியடி. 0775991949

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org